Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 | ஞாயிற்றுக்கிழமை | ஐப்பசி 13 ஆம் நாள் | பக்கங்கள்: 16+08 | விலை: 60/=
கதிர் : 338 | 30 ஒக்ரோபர் 2022 | வள்ளுவர் ஆண்டு 2053

## பாலியல் வன்புணர்வு யாழிலும் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். மாவட்டத்திலும் பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத் தரவுகளிலிருந்து தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீது பாலியல் வன்புணர்வு இடம்பெற்றதாக 38 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றுள் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில்10 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதிகளவான சம்பவங்கள் அச்சுவேலி பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் 02

## கௌரிசங்கரி தவராசா ஒரு 'இரும்புப் பெண்மணி'

### அவரது நினைவுரையில் பலரும் புகழாரம்



யாழ்., ஒக். 30

மூத்த சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்திலுள்ள 'வலம்புரி' விடுதியில் நேற்று 02

# வடக்கு மாகாணத்திலுள்ள மருத்துவமனைகள் ஸ்தம்பிக்கும்?

## மருத்துவர்கள், தாதியர்கள் தவிர்ந்த ஏனையோரின் மேலதிக நேரக் கொடுப்பனவு பெருமளவு 'வெட்டு'

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 30

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்குட்பட்ட மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள், தாதியர்கள் தவிர்ந்த ஏனைய சுகாதாரப் பணியாளர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு பெருமளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உரிய ஆளணி இல்லாத நிலையில், பணியாளர்கள் மேலதிக நேரக் கடமைகளின் ஊடாகவே மருத்துவமனைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்த நிலையில், மேலதிக நேரக் கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளமையால், மருத்துவமனைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் நேரடியாக அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. 02



நேற்று மாலை நல்லூரில் 'தலைகாட்டிய' சூரன்

## நல்லூரில் இன்று மாலை 'சூரன்போர்'

யாழ்ப்பாணம், ஒக். 30

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் சூரன்போர் உற்சவம் இன்றுமாலை இடம்பெறவுள்ளது. மாலை 4 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று, சுவாமி வெளி வீதி வலம் வருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## தமிழர் பாரம்பரியத்தைப் பறைசாற்றிய வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஒக். 30

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா தமிழர் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வகையில் மிகச் சிறப்பாக நெல்லியடி மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

காலை 8:30 மணியளவில் நெல்லியடி முருகன் ஆலயத்திலிருந்து பூசை வழி 02

### உயிர்கொல்லி போதைமாத்திரை விற்பனை

## வவுனியா மாவட்டத்தில் மருந்தகங்களும் சிக்கின

யாழ்ப்பாணம், ஒக். 30

வவுனியாவிலுள்ள பல மருந்தகங்களுக்கும் உயிர்கொல்லி போதைமாத்திரை விற்பனையுடன் தொடர்புள்ளமை தெரியவந்துள்ள 02

## கடலட்டை பிடித்த 7 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஒக். 30

மண்டைதீவுக் கடற்பரப்பில் கடலட்டை பிடித்த ஏழு பேரையும், தங்கூசி வலையைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட ஒருவரையும் நாளை திங்கட்கிழமை 02

## எந்தவொரு கடலட்டைப் பண்ணைக்கும் யாழ்., கிளிநொச்சியில் அனுமதியில்லை

### பருத்தித்தீவு பண்ணையின் அனுமதி காலாவதி

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் எந்தவொரு கடலட்டைப் பண்ணைக்கும் இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. சட்டவிரோதமாகச் செயற்படும் பண்ணைகளுக்கு எதிராக ஒருவார காலத்துக்குள் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட 02

## நாளாந்தம் 5 இலட்சம் லீற்றர் ம.எண்ணெய்

கொழும்பு, ஒக். 30

மீன்பிடித் துறைமுகங்களுக்கு நாளாந்தம் 5 இலட்சம் லீற்றர் மண்ணெண்ணெய் 02

Digitized by Noolaham Foundation

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





## கௌரிசங்கரி...

இடம்பெற்றது. அவரது உருவப்படத்துக்கு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா எழுதிய 'கௌரி - நீதியின் குரல்' நூலும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி எனப் பல்வேறு கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். அத்துடன் சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் கைதிகளின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலதரப்பினரும் பங்கேற்றனர்.

அவர்களால் நினைவுரைகள் ஆற்றப்பட்டன. மூத்த சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட - பாதிக்கப்பட்ட மூவினத்தவருக்காகவும் அரும்பாடுபட்ட ஒருவர் என்றும், கொழும்பில் சிங்கள அரச பயங்கரவாதத்துக்கு மத்தியில் நின்றுகொண்டு துணிச்சலாகப் போராடிய 'இரும்புப் பெண்மணி' என்றும் நினைவுரை நிகழ்த்திய பலரும் புகழாரம் சூட்டினர். (அ-ஒ-125)

## பாலியல்...

பொலிஸ் பிராந்தியத்தில் 28 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றுள் அதிகளவான சம்பவங்கள் கொடிகாமம் பொலிஸ் பிரிவில் நடைபெற்றுள்ளன.

2022 ஆம் ஆண்டு 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீது பாலியல் வன்புணர்வு இடம்பெற்றதாகக் கடந்த 9 ஆம் மாதம் 30ஆம் திகதி வரையில் 24 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் காங்கேசன்துறைப் பொலிஸ் பிராந்தியத்தில் 9 சம்பவங்களும், யாழ்ப்பாணப் பொலிஸ் பிராந்தியத்தில் 15 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. காங்கேசன்துறைப் பொலிஸ் பிராந்தியத்தில் பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுகளிலும், யாழ்ப்பாணப் பொலிஸ் பிராந்தியத்தில் சுன்னாகம் பொலிஸ் பிரிவிலும் அதிகளவான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

அதேபோல் 2021ஆம் ஆண்டு, 16 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மீதான வன்புணர்வுச் சம்பவங்கள் 5 பதிவாகியுள்ளன. 2022ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது. காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில்ஒருசம்பவமும், யாழ்ப்பாணப்பொலிஸ் பிராந்தியத்தில் 4 சம்பவங்களும் 2021ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டு யாழ்ப்பாணப் பொலிஸ் பிராந்தியத்தில் 3 சம்பவங்களும் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 4 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

2021ஆம் ஆண்டில் பாரதூரமான வன்புணர்வுச் சம்பவங்கள் 2 பதிவாகியிருந்த நிலையில் இந்த ஆண்டு அது மூன்றாக அதிகரித்துள்ளது. நாடளாவியரீதியில் பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் திணைக்களம் தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125)

## கடலட்டை...

நீதிமன்றில் முற்படுத்த கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடற்படையினர் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களமும் இணைந்து முன்னெடுத்த சோதனை நடவடிக்கையில் கடலட்டை பிடித்து வந்த ஏழு பேர் கடலட்டையுடன் இனங்காணப்பட்டதுடன், தங்கூசி வலையைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட ஒருவர் இனங்காணப்பட்டு அவரது படகும் பறிமுதல் செய்யப்பட்டது. (அ-ஒ-27)

## வடக்கு...

வடக்கு மாகாண பிரதம செயலரால், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு சில தினங்களுக்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கதிரியக்கப்படப்பிடிப்பாளர்கள், மருந்தாளர்கள், ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், சுகாதார சிற்றூழியர்கள் ஆகிய 4 தரப்பினருக்குமான மேலதிக நேரக் கொடுப்பனவே பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

இந்த 4 பணியாள் தொகுதிக்கும் உரிய ஆளணி வெற்றிடங்கள் மருத்துவமனைகளில் பூர்த்திசெய்யப்படவில்லை. இதனால் அங்குள்ள பணியாளர்களே, தமது மேலதிக நேரத்தின் ஊடாக கடமை புரிந்து நோயாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுகின்றனர்.

கடந்த மே மாதமே, மேலதிக கொடுப்பனவு மட்டுப்படுத்தப்படும் என்று வடக்கு மாகாண பிரதம செயலரால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், அந்த அறிவிப்பு மீளப்பெறப்பட்டு வழமைபோன்று தமக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும் என்ற நம்பிக்கையில் இப்போது வரையில் பணியாற்றி வருகின்றனர்.

ஆனால், மே மாதத்தின் பின்னரான காலப் பகுதிக்குரிய மேலதிக நேரக் கொடுப்பனவு பணியாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இது தொடர்பில் அவர்கள் கேள்வியெழுப்பியிருந்த நிலையிலேயே சில தினங்களுக்கு முன்னர், மேற்படி கடிதம் பிரதம செயலரால் மீண்டும் அனுப்பப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி இந்தக் கொடுப்பனவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய மாகாணங்களில் இவ்வாறான நடவடிக்கைமுன்னெடுக்கப்படாதபோதும், வடக்கு மாகாணத்தில் மாத்திரம் இவ்வாறான செயற்பாடு பின்பற்றப்பட்டுள்ளது. இந்த மேலதிக நேரக் கொடுப்பனவு மட்டுப்படுத்தல் காரணமாக நோயாளர்களே நேரடியாகப் பாதிப்புக்களை எதிர்கொள்ளவுள்ளனர்.

கதிரியக்கப்படப்பிடிப்பாளர் (எக்ஸ்ரே எடுப்பவர்) மருத்துவமனையில் ஒருவர் பணியாற்றினால் அவருக்குரிய கடமை நேரமான காலை 8 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையே பணிபுரிவார். அதேபோன்று வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களிலும் அவர் பணிபுரிய மாட்டார். ஏனெனில், அவருக்கு மாதாந்தம் 5 விடுமுறை நாள் கொடுப்பனவு மாத்திரமே தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சாதாரண எக்ஸ்ரே எடுப்பதற்கே காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோன்றே ஏனைய பணியாளர்களது கடமைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அவர்கள் 'சட்டப்படி' வேலையை ஆரம்பிக்கவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. இதனால் நோயாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளவுள்ளனர்.

மேலும், மாகாண மருத்துவமனைகளுக்கு அம்புலன்ஸ்களுக்குரிய எரிபொருள் கொடுப்பனவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு எரிபொருள் விலையை விட தற்போது எரிபொருள் விலை மூன்று மடங்காக உயர்ந்துள்ளது. ஆனாலும், மருத்துவமனைகளின் அம்புலன்ஸ்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்படாமல், அதன் சேவையை மூன்றில் ஒன்றாகக் குறைக்குமாறு வாய்மூல அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பல மருத்துவமனை அம்புலன்ஸ்களின் மூன்றாம் காலாண்டுக்கான எரிபொருள் கொடுப்பனவுகள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு செலுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## தமிழர்..

பாட்டுடன் தமிழர் பாரம்பரியமான தப்பாட்டம், சிலம்பாட்டம், கும்மி, பறை இசை, கரகம், காவடி, மயிலாட்டம், ஆதிவாசிகள் ஆட்டம், பொம்மலாட்டம், ஒயிலாட்டம், காத்தான் கூத்து, அரிச்சந்திரா மயான காண்டப் பாடல், கரைவலைப் பாடல் உட்பட பல ஆட்டங்களுடன் விருந்தினர்கள், விழா அரங்குக்கு அழைத்து வரப்பட்டனர்.



மறைந்த எழுத்தாளர் தெணியான் அரங்கில் நிகழ்வுகள் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. கலை நிகழ்வுகள், விருது வழங்கல்களும் நடைபெற்றது.

கருத்துரையை சொல்லருவி த. சிவகுமாரன், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன் ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து 'வடந்தை' எனும் நூல் வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் செம்மொழியான தமிழ் மொழி எனும் ஊர்தி, வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் வாழ்வியல் மற்றும் தொழிலை சித்தரிக்கும் ஊர்தி உட்பட பல ஊர்திகளும் பவனி வந்தன. (அ-ஒ-27)

## வவுனியா...

துடன், சில மருந்தகங்கள் ஏற்கனவே சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள மொத்த தனியார் மருந்துகள் விற்பனை செய்யும் நிலையத்திலிருந்து வவுனியாவைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் பெருமளவு உயிர் கொல்லி போதைமாத்திரைகள் கொள்வனவு செய்திருந்தார் என்பது தெரியவந்திருந்தது. இதனையடுத்து மருத்துவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

இதன்போது வவுனியாவிலுள்ள வேறு சில மருத்துவர்கள் மற்றும் மருந்தகங்களுக்கு உயிர்கொல்லி போதைமாத்திரை விற்பனையுடன் தொடர்புள்ளமை தெரியவந்துள்ளது. அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-5)

## எந்தவொரு...

இலவங்குடாவில் தமது பாரம்பரிய தொழில்கள் பாதிக்கப்படும் வகையில் இடம்பெறும் அட்டைப் பண்ணைகளை தடுக்குமாறு மீனவர்கள் சார்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் அண்மையில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கமைய கடந்த புதன்கிழமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடையே விசாரணைகள் இடம்பெற்றது. இந்த விசாரணைகளின்போது நெக்டா நிறுவனத்தின் சார்பில் கலந்துகொண்ட அதிகாரியால் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் எந்தவொரு கடல் அட்டைப் பண்ணைக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. கடலட்டை பண்ணை அமைப்பதற்காக இரண்டு விண்ணப்பங்கள் மாத்திரமே கிடைத்துள்ளன. மேலும், யாழ்ப்பாணம் - பருத்தித்தீவில் உள்ள கடலட்டைப் பண்ணையின் அனுமதி கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்துள்ளது. அது நீடிக்கப்படவில்லை.

இந்த நிலையில் சட்டவிரோதமாக இயங்கும் பண்ணைகளுக்கு எதிராக ஒரு வார காலத்துக்குள் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் ஊடாக அது மேற்கொள்ளப்படும் என்று விசாரணைகளின்போது உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும் முறைப்பாட்டாளர் தரப்பினரும், அனுமதி பெறாது இந்த நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் அவர்களை முறையான அனுமதியைப் பெற்று இதனை முன்னெடுக்குமாறும் இந்த விசாரணையின்போது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## நாளாந்தம்...

வழங்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சின் செயலர் இந்து கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது. இதற்காக சுமார் 27 ஆயிரம் மீன்பிடி படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக செயலர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

## பெண்ணின் சடலத்தை இனங்காட்ட கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து 4 அடி 5 அங்குலம் உயரமுடைய பச்சை நிற சேலை அணிந்த பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சடலத்தை உரியவர்கள் அடையாளம் காட்டுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*அத்துமீறிய மீன்பிடி*

# தமிழக மீனவர்களுக்கு நவம்பர் 9 வரை மறியல்!

**யாழ்ப்பாணம், ஒக். 30**

**இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 7 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 9ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டது.**

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து, கடந்த புதன்கிழமை மேற்படி 7 தமிழக மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் கடந்த வியாழக்கிழமை கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை திணைக்களத்தின் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே 7 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (சு-27)

# போதைப் பாவனை ஒழிப்பு பெற்றோருக்கு கருத்தரங்கு

சாவகச்சேரி, ஒக். 30

நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்களின் பெற்றோருக்கு போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த வியாழக் கிழமை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

அதிபர் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் சாவகச்சேரி பதில் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சிவரூபன், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ம.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

தென்மராட்சி கல்வி வலயம், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு போதைப்பொருள் பாவனை ஒழிப்பு தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வு மற்றும் கருத்தரங்குகள் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சு-9)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

மக்கள் சேவை மகேசன் சேவை

**திரு. செல்லத்துரை திருமாறன் (பிரபு)**

கோண்டாவில், தெல்லிப்பளை
இராஜேஸ்வரி திருமண மண்டப உரிமையாளர்,
இராஜேஸ்வரி அறக்கட்டளை ஸ்தாபர்,
சமாதான நீதவான் (J.P)



" தெரிந்தவர்களுக்கு உதவி செய்யும் போது மனிதன் ஆகிறார்
தெரியாதவர்களுக்கு உதவி செய்யும் போது
கடவுள் ஆகவே ஆகிறார் "

என்ற வாசகத்திற்கு அமைய சுயநலம் கொண்ட இவ்வுலகில்
எந்தவொரு எதிர்பார்ப்பும் இன்றி
தன்னுடைய சொந்த முயற்சியில் பெண் தலைமைத்துவ,
வறிய குடும்பங்களிற்கு காணியுடன் கூடிய மனைகளை கட்டி
அவர்களை குடியமர்த்துகின்ற மிகப்பெரிய சேவையை செய்கின்ற
" கொடை வள்ளல் மகாபிரபு செல்லத்துரை திருமாறன்"
அவர்களிற்கு எமது லட்சுமி திருமண மண்டபத்தினரின்
உளம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.



**வாழ்த்துவோர்:**
**லட்சுமி திருமண மண்டபத்தினர்.**
**195A, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 80 ரூபாய் பூச்சுவேலை, கட்டுவேலைகளும் செய்துதரப்படும்.

**077 334 1281**

The Board of Directors of Jaffna College, Vaddukoddai
Cordially invites you to the
**INSTITUTION AND INSTALLATION**
of the
9th National Principal of Jaffna College
**MS RUSHIRA KULASINGHAM**
BA (Jaf) MA (kel) CTHE (Col) SEDA (UK)
Sunday, 6th November 2022
at
10.00 am
at the
JDCSI Cathedral, Vaddukoddai
livestream : https://youtu.be/HUKhKTLg1Ek

## WE'RE HIRING RNS IITC GLOBAL
## Full Stack Developer

FULL TIME

RNS 1S an Australian based Software and Web Development Companywith Branches in Sri Lanka & Singapore. We are looking for a Full Stack Developer to join with our partner of IITC Global.

REQUIREMENTS

- Tertiary Qualification Degree in a related IT discipline
- 2 Years or more industrial experience in Angulare development 1s a Mondatory requirement
- Industrial experience in HTML/ SCSS development
- Industrial experience in .Net Core API development
- Good knowledge in SQL and Stored Procedures

WORK FROM HOME

ONLINE INTERVIEWS

Deadline :15th November.2022

EMAIL: career@infinityitcreatives.com VISIT: www.iitcglobal.com

## மணமகன் தேவை

1982 இல் பிறந்த ரேவதி நட்சத்திரம் கி.ப. 7, அரச சேவை பட்டதாரியான விவாகரத்துபெற்ற மணமகளுக்கு மணமகன் தேவை.

Viber: **077 545 2892**

## கடை வாடகைக்கு (Shop for Rent)

வெள்ளவத்தையில், காலி வீதியில், கொமர்ஷியல் வங்கிக்கு முன்பாக ரைல்ஸ் பதித்த கடை வாடகைக்கு உண்டு. (Office Use க்கு உகந்தது) முதலாம் மாடி

**071-2625405, 076-9659679**

## ICT Classes

**தரம் : 9 முதல் A/L,** வரையான மாணவர்களிற்கு தனியாகவோ அல்லது குழுவாகவோ பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

**074 264 0468**

## விற்பனைக்கு

தேக்கு மர கதவு ஜன்னல், கண்ணாடி ஜன்னல், கதவு நிலைகள் இறக்குமதி செய்யப்பட்ட சீலிங் ஷீட், Floor கார்ப்பட், லைட்ஸ், அலுமினியம் பார்டிஷன் இறக்குமதி செய்யப்பட்ட கார் செட்டப்ஸ், பெலட் ஜெக், போக்கர் கேபல், ஸ்டீல் பிளேட் மற்றும் கட்டிட பொருட்களுக்கு தேவையான பாவித்த இயந்திரங்கள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.

திங்கள் முதல் சனிக்கிழமை
காலை 9.30 - மாலை 5.00 வரை பார்வையிட முடியும்

தொடர்புகளுக்கு :

**0777 578 277 | 0777 924 194**
**0777 804 601 | 0775 451 840**

# 266/18A, St Jude Garden, Bopitiya Road Dikowita, Wattala.

## Rooms for Rent Daily Paiment

வெள்ளவத்தையில் காலி வீதியில் கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக **Tiles** பதித்த **Attached Bathroom** உடன் அறைகள் வாடகைக்கு உண்டு.

**071-2625405, 076-9659679**

## மணமகள் தேவை

1992 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 8 இல் செவ்வாய் உடைய தனியார் கம்பனியில் உதவி முகாமையாளராக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 637 5636**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம் 1984ல் பிறந்த (அச்சுவினி) வர்த்தக நிலையம் நடத்தும் மணமகனுக்கு 36 வயதிற்குட்பட்ட படித்த பெண் தேவை. (சீதனம் எதிர்பார்க்கவில்லை)

**0779251048**

## வேலையாட்கள் தேவை

வைத்தியசாலை சுத்திகரிப்பாளர் ஆண் பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்
**நரம்பியல் புனர்வாழ்வு சிகிச்சை நிலையம்** - Institute of Medical Sciences - Green Memorial Hospital மானிப்பாய்.

தொடர்பு: **076 047 7106**
**021 225 6990**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறூட், ரகன் புறூட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காளி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம் கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## சூரசங்ஹாரம்

நல்லூர் ஸ்ரீ பாலகதிர் காமர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு விசேட பூசைகள் இடம் பெற்று தொடர்ந்து சூர சங்ஹாரம் இடம்பெறவுள்ளது.

தமிழர் பண்பாட்டு பறை, தாரை, தம்பட்டை வாத்தியங்கள் முழங்க எம்பெருமான் சட்டநாதர் வீதியுலா வருவார் என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

✦ ✦ ✦

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்த சாமி ஆலய சூரசங்ஹாரம் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. மாலை 3 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை ஆரம்பமாகி, மாலை 4 மணிக்கு சுவாமி வெளிவீதி வந்து சூரசங்ஹாரம் இடம்பெறும். நாளை திங்கட்கிழமை பாறணை பூஜை அதிகாலை 4 மணிக்கு இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறியத்தருகின்றனர். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

"இந்த உலகத்தில் அனைத்துமே நிரந்தரமில்லை, எனவே உங்கள் பிரச்சினையையும் நிரந்தரம் ஆகாது." - சார்லி சப்ளின்

## பன்னாடைக்குப் பஞ்சமில்லை!

பாலையும் தண்ணீரையும் சேர்த்துவைத்தால் அவற்றில், பாலைப் பகுத்தறிந்து உட்கொள்ளும் அன்னம் போன்று நாம் இருக்க வேண்டுமே தவிர, தேவையில்லாததை எடுத்துக்கொண்டு பயன்பாட்டுக்கு உதவும் பவற்றை விட்டுவிடும் பன்னாடையாக இருத்தல் தகாது. ஆனால், இலங்கை அரசியலின் கதையே வேறு. இங்கு அன்னங்கள் காணக்கிடைக்காதவை. எங்கு பார்த்தாலும் பன்னாடைகள்தான். தொன் கணக்கில் பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு பன்னாடைகள் மலிந்த – நிறைந்த தேசமிது.

ஒரு நாட்டின் பன்மைத்துவம் எவ்வாறிருக்க வேண்டும் என்ற ஆகச் சிறந்த கற்பிதத்தை, இந்திய வம்சாவளியினரான ரிஷி சுனக் என்பவரைப் பிரதமராகத் தெரிவு செய்து வெளிப்படுத்தியிருக்கின்றது பிரிட்டன். எந்தவொரு நாட்டில் இன, மத, மொழி, கலை, கலாசார பன்மைத்துவமும் அதன் விழுமியங்களும் ஒன்றை ஒன்று விஞ்சாதவாறும், ஒன்றையொன்று தாழ்த்தாதவாறும் சரிநிகர் சமானமாகப் பேணப்படுகின்றதோ, அந்த நாட்டின் எதிர்காலம் பசுந்தரை நடைப்பயணமே.

பிரிட்டனின் பன்மைத்துவத்தை முன்னுதாரணமாகக் கொண்டு செயலாற்றுங்கள் என்றால், 'இந்திய வம்சாவளியரான ரிஷி சுனக் பிரிட்டனில் பிரதமராக வரலாம், இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட பஸில் இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினராக வரமுடியாதா?' என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார் பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம். ரிஷி சுனக்கின் திறமையை பிரிட்டிஷார் பார்த்ததுபோல், பஸிலின் திறமையை மட்டுமே இலங்கையர்கள் பார்க்க வேண்டும். மாறாக அரசமைப்பின் மூலம் இரட்டைக் குடியுரிமைக்குத் தடைவிதிப்பதெல்லாம் நாட்டைக் கல்யுகத்தை நோக்கி அழைத்துச் செல்வதாகும் என்று பஸிலைப் பரிந்துரைக்கவும் அவர் தவறவில்லை. பஸிலின் ஏழு மூளைகள் கொண்ட திறமையைத்தான் இந்த உலகமே பார்த்ததே.

பிரிட்டிஷார் மத்தியில் இந்துப் பின்னணியைக் கொண்ட சுனக் அந்த நாட்டில் அதியுயர் அதிகாரக் கதிரையை அலங்கரிக்கும்போது, இலங்கையில் ஒரு தமிழர் அல்லது ஒரு முஸ்லிமால் ஏன் பிரதமராகவேனும் வரமுடியாதுள்ளது? என்ற கேள்வி – சிந்தனை சாகர காரியவசத்துக்கு வரவில்லை. இந்தச் சிந்தனை வந்திருந்தால் எதற்காக இலங்கையில் குருதிச் சகதி பெருக்கெடுக்கவேண்டும்? இன்று இப்படியொரு பின்னடைவை – அலங்கோலத்தை – சிதிலத்தை இலங்கை சந்தித்த பின்னரும்கூட, பிரிட்டனின் பன்மைத்துவம் பற்றிய நேர்மறையான சிந்தனை இருக்க, அதற்குள்ளும் இரட்டைக் குடியுரிமையைத் தூக்கிச்சென்று பஸிலுக்கு முட்டுக்கொடுப்பதானது, கனியிருக்க காய் கவர்தலன்றி வேறென்ன?

சரி எது? தவறு எது? என்பதை நேர்படச் சிந்தித்து, தற்துணிவுடனும் முதுகெலும்புத் தனத்துடனும் செயற்படும் திராணிகொண்டவர்களாக எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தால், ஒன்றுக்கொன்று முரணான – இறுதி ஐந்து அரசமைப்புத் திருத்தங்களுக்கும் – கைகளை உயர்த்திய 18 பேர் நாடாளுமன்றத்தில் இருப்பார்களா? அப்படியாயின் இவர்கள், ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிப்பதையும் ஆதரிக்கின்றார்கள். அதேநேரம் அதிகாரங்கள் குறைக்கப்படுவதையும் ஆதரிக்கின்றார்கள். நாடாளுமன்றின் அதிகாரங்கள் பலப்படுவதையும் ஆதரிக்கின்றார்கள். நாடாளுமன்றம் நலினப்படுவதையும் ஆதரிக்கின்றார்கள். பிரிட்டனின் காலனித்துவக் கொள்கைகளைக்கூட சரிவரப் பேணத் தகுதியற்றவர்களிடம் பிரிட்டிஷாரின் மேம்பட்ட கொள்கைகளை எதிர்பார்ப்பதெல்லாம் அவர்களின் தவறல்லவே, எல்லாமே எங்களின் தவறு.




# போதியளவு நெல் கையிருப்பு; அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை!



கொழும்பு, ஒக். 30

**நாட்டில் எதிர்வரும் காலங்களில் அரசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து இல்லை என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் விவசாய அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:-
நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் 7 ஆயிரத்து 70 மெற்றிக் தொன் நெல் இருப்பு உள்ளது. நாட்டில் போதியளவு அரிசி கையிருப்பு இருப்பதால் எதிர்காலத்தில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இல்லை. சந்தையில் அரிசியின் விலையைக் கருத்திற்கொண்டு, அரிசியின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். தேவைப்பட்டால் நெல் சந்தைப்படுத்தல் சபையின் கையிருப்பு நெல் அரிசியாக மாற்றப்படும்.

எனினும், தற்போது சந்தையில் அரிசியின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த இயலுமாக உள்ளது. அரிசி இறக்குமதி மற்றும் உதவியாக வேறு நாடுகளில் இருந்து அரிசி கிடைத்தமையால் அரிசிக்கு தற்போதும் எதிர்காலத்திலும் பற்றாக்குறை ஏற்படாது - என்றுள்ளது. (ம)

# விவசாயத்தை ஊக்குவித்தால் நாடு தன்னிறைவு அடையும்

## காதர் மஸ்தான் தெரிவிப்பு

மன்னார், ஒக். 30
நாடு பொருளாதாரத் தன்னிறைவை எட்ட விவசாயம் ஊக்குவிக்கப்படவேண்டும். விவசாயம் நல்லதொரு நிலையை அடையும் போதே நாடு தன்னிறைவை எட்டும் என கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.
கிராமிய பொருளாதார அமைச்சின் நிதியொதுக்கீட்டில் விவசாயிகளுக்கான பயறு மற்றும் உளுந்து ஆகிய தானியங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலே மஸ்தான் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
விவசாயத்தை மேன்மைப்படுத்துகின்ற உலக நாடுகள் நவீன விவசாய முறைகளை கையாண்டு குறைந்த மூலதனத்துடன் கூடிய விளைச்சலைப் பெறுகின்றன. அதேபோல எமது நாடும் நவீன விவசாய முறையில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.
எமது நாடானது முற்றிலும் விவசாயத்துக்கு உகந்த ஒருநாடாகும். சகல இயற்கைவளங்களையும் விவசாயத்துக்கான சாதகமான கால நிலையையும் கொண்டுள்ளது. இது எமக்குக் கிடைத்த கொடையாகும் - என்றார். (ச)

நாளை 31.10.2022 திங்கட்கிழமை ஐப்பசி 14
சுபநேரம் : 12.03 - 01.33
ராகுகாலம்: 07.33 - 09.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 21 . 04 . 1938

மறைவு 01 . 10 . 2022

## அமரர் காத்தாமுத்து சந்தனக்கண்டு (சந்தனம்)

கடந்த (01.10.2022) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயார் அமரர் காத்தாமுத்து-சந்தனக்கண்டு அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் நாளை (31.10.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் ஆலடி வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் தங்கள் நினைவுகளுடன்

'ராஜேஸ்பவனம்'
ஆலடி வீதி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.
0743720271

*The 69th Annual Festival of Carols*

*by the*

***Combined choirs of***

***Schools and College of the North***

*will be held at the st.John's college Hall*

*On Saturday 5th November 2022*

*at 4.00 Pm*

*Admission : By Hymn Sheet - Rs.50/=*

## வகுப்புகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை (2014) வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இது வரை இணைந்து கொள்ளாத மாணவர்களை உடனடியாக இணைந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ-ம)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் ஆனந்தகுமார் ஜெயபிரகாஷ் (பிரகாஷ்)

திதி : ஐப்பசி ஷஷ்டி (30.10.2022)

ஆண்டு ஆறு ஆகிவிட்டதே - நாம்
அழுது புலம்புகின்றோம் - பிரகாஷ்
மீள முடியாத நினைவுகளுடன்
உன் ஆத்ம சாந்திக்காய்
- உன்
ஆன்மா சாந்தி பெற அனுதினமும்
வேண்டுகின்றோம் இறைவனை


அன்னையின் மடியில் 08.11.2002

கந்தனின் அடியில் 05.11.2016

இராஜவீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, தம்பி, தங்கை.

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 03 . 1953

மறைவு 26 . 10 . 2022

## கந்தையா கருணாநிதி

சாவகச்சேரி நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கருணாநிதி அவர்கள் 26.10.2022 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், தேவமலரின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, சிவராஜா (மோகன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், கயல்விழி (ஜேர்மனி), திருமாறன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற இராசமலர், பவானி, சரோஜாதேவி, தேவகுமார், மனோரஞ்சிதம் (ரஞ்சனா- சுவிஸ்), பாலகுமார் - (லண்டன்), வசந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவசெல்வநேசன் (சிந்தன் - ஜேர்மனி), பிரதீபா ஆகியோரின் அன்பு மாமனாரும், சைந்தவி, சமீரா, வருண்யன், யஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நுணாவில் மேற்கு.**
**சாவகச்சேரி.**
**077 711 2936**

(cs.47256) (2.6)

**தகவல் :**
**மனைவி, பிள்ளைகள்**
**மற்றும் குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 06 . 1934

இறப்பு 23 . 10 . 2022

## அம்பலவாணர் செல்லையா

யாழ். புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பிரம்படிலேன் மற்றும் பிரான்ஸ் Paris ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் செல்லையா அவர்கள் கடந்த (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் மருதநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற உருத்திராதேவி(மகேஸ்வரி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திருமேனிப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயகுமார் (பிரான்ஸ்), உதயபவானி (ராதிகா- பிரான்ஸ்), உதயராணி (மாவீரர்), உதயறஜனி (ஜேர்மனி), உதயறமா (ஜேர்மனி), சசிகலா (சசி- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாமினி, சிவராசலிங்கம், கமலானந்தன், பாக்கியநாதன், ஜெயலிங்கம்(சிவா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், ஆறுமுகம் மற்றும் தவமணிதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்புச் சகலனும், கஜாயினி- லக்சுமிராம், ஷோபசாலினி- ராகுலன், சகானா- உமேஷ், அர்ச்சனா- அச்சுதன், சர்மினா, சிந்துஜன், டினோஜா, தனோஜன், சாருஜா, கெவின், மாதுஜி, டிலான் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெய்டன், இலேனா, அஜெய் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார். —

அன்னாரின் இறுதிக்கிரியைகள நாளை (31.10.2022) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 30
சித்த விசேட சிகிச்சைக் கட்டணப் பிரிவும் மருந்து விற்பனை நிலையமும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டன. வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட கட்டடம், அச்சுவேலி செல்வநாயகபுரம் பகுதியில் அமைந்துள்ள மாவட்ட சித்த மருத்துவமனையில் திறக்கப்பட்டது.
விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன கலந்து கொண்டிருந்தார். (ஒ-14-20)




## விற்பனைக்கு உண்டு

அச்சகத்திற்கு தேவையான Duplo (A3 Size) இயந்திரம், China Cutter (Box board size) போன்றவை உடன் விற்பனைக்கு உண்டு

0770312313

## கடைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கடைகள் வாடகைக்கு

0773307073

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1982ல் பிறந்த சுயதொழில் புரியும் 7ல் செவ்வாய் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

0772719104

## பெண் வேலையாட்கள் தேவை

இலக்கம் 194 யாழ் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பொதியிடுவதற்கு பெண் வேலையாட்கள் தேவை.

0766403388

## விற்பனைக்கு

பற்றரியில் ஓடும் சைக்கிள்கள், சோலர் பனல், டீசல் வாட்டர் பம், சைக்கிள்
**179 சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்**
**(சூரியன் களஞ்சியம் அருகில்)**
(திங்கள் காலை 09.00 மணி பின்னர் பார்வையிடலாம்) 0771746101

## மின்பிறப்பாக்கி விற்பனைக்கு

**England Lister**
**ST-2 Original Generator (8Kw)**
**விற்பனைக்குண்டு. விலை 700000/-**
**(Handle Original)**
தொடர்புகட்கு -
**0707130839**

## LUXURY APARTMENTS FOR SALE



**வெள்ளவத்தை காலி வீதிக்கு அருகாமையில் IBC Roadல்**
**under Construction Apartments**
**விற்பனைக்கு உண்டு**
2,3,4 படுக்கையறைகள்
1550, 1400, 1210, 1150, 830sq.ft
Senior citizens மற்றும் அங்கவீனர்களுக்கான முற்றிலும் அதற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட தொடர்மாடி வீடுகள், முதல் முறையாக இலங்கையில்
✓ Bank Loan arrange பண்ணித்தரப்படும்.
✓ Completion 2023 December
✓ Interest Free 18 மாத தவணை கட்டணம் ஒழுங்குபடுத்தி தரப்படும்
**TP : 077 522 2613**
Royal - T Construction ( Pvt ) Ltd

## சத்திரசிகிச்சை மற்றும் ஆலோசனை வழிகாட்டல் சேவைகள்

**பொதுச் சத்திரசிகிச்சை நிபுணர்**
Dr. S. **மதிவாணன்**
MBBS, MD Surgery, MRCS (Eng)
Fellowship in vascular Surgery (UK), Consultant Surgeon
Board certified in General Surgery with vascular interest.
Dr. K. **காண்டீபன்**
MBBS, MD (Orthopaedic)
Consultant Orthopaedic
Surgeon and Senior Lecturer Teaching Hospital Jaffna
**புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் பி. ப 4.30 மணிக்கு முன்பதிவுகளுக்குத் தொடர்பு கொள்ளவும்**
தொலைபேசி இலக்கங்கள் - 076 0477 106 / 021 225 6990
Institute of Medical Sciences
Green Memorial Hospital - Manipay
(ச.383781(2.7))

# UK / CANADA
# குடி பெயர்வதற்கான வாய்ப்பு!!!

குடும்பத்துடன் UK / Canadaவில் குடிபெயர்வதற்கான விசா

நீங்கள் 30 வயதிற்கு மேற்பட்ட திருமணமானவராயின், உங்களுக்கு உங்களது குடும்பத்தினருடன் ஐக்கிய இராச்சியத்திற்கு மற்றும் கனடாவிற்கு சட்டபூர்வமாக சென்று குடிபெயர்வதற்கான ஓர் வாய்ப்பு!!!

**நீங்கள் J B P VISA SOLUTION ஐ தெரிவு செய்வது ஏன்?**

- 100% சரியான தகவல்களை வழங்குதல் மற்றும் சரியான வழிகாட்டுதல்
- எந்தவொரு தரகரும் இன்றி, 15 வருடங்கள் ஐரோப்பாவில் தங்கியுள்ள இலங்கை Consultant உடன் நேரடியாக தொடர்பு கொள்ள கூடிய வாய்ப்பு
- குறைந்த பட்ச சேவை கட்டணத்தில் ஆரம்பித்து மிகுதி பணத்தை தங்களது தேவை பூர்த்தியானதன் பின் செலுத்தக்கூடிய வாய்ப்பு
- ஐரோப்பிய ஒன்றியத்தின் எந்தவொரு நாட்டிலும், அல்லது இங்கிலாந்து மற்றும் கனடாவில் ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற்று கொடுப்பது தொடர்பில் Solicitorsகளின் ஒத்துழைப்பு.

தொடர்புகளுக்கு: 0743 898 485 | 0772 281 085
E-Mail அனுப்புதல் : info@thevisasolution.com
J B P VISA SOLUTIONS (PVT) LTD
(Registered as a limited liability company in Sri Lanka PV 00203433)
www.thevisasolution.com
SHIRDI Ads


# நாற்பதாம் ஆண்டு திருமண நிறைவுநாள் வாழ்த்துக்கள்



## திரு.திருமதி இராசநாயகம் சிவமலர்

**(2022.10.30)**

பிரமனால் பொருத்தப்பட்டு
இருமனங்கள் இணைந்த நாள் !
இல்வாழ்வின் கனவுகள் விரிந்த நாள் !
நாற்பது வருடங்கள் சிறகின்றி பறந்த நாள் !
இந்நாளில் நாநிலமும் போற்ற வாழ்கவென
வாழ்த்துகிறோம்....
வாழி ! வாழி ! வாழி !

அன்பான பிள்ளைகள் - எமை
அகம் முழுதும் நிறைத்து...
அளவு கோல் இன்றிய அன்பு மழை பொழிந்து...
அவனிதனில் ஏற்றம்காண வைத்த - எங்கள்
கண்கண்ட தெய்வங்களாம் - எங்கள்
அம்மா அப்பாவை இந்நாளில் வாயார
வாழ்த்துகிறோம்.... வாழி ! வாழி !!

வாழ்க்கைப் பயணமதில்
காலமது கரைந்தோட...
இன்பமுடன் அன்பும் இணைந்து நடைபோட...
ஏழு சுரங்களுடன்... எட்டாம் சுரமாக
ஈரேழு ஜென்மம் இணைந்தே வாழ...
வாழ்த்துகிறோம்
வாழ்க ! வாழ்க !! வாழ்க !!!

ஆன்ற மதிப்புடனே மருமக்களை களிகூர்ந்து...
தாய் தந்தை சோதரரும், உறவுகளும் போற்றிடவே...
நாளொன்று தவறாது இன்பதுன்பம் யாவினிலும்...
தம்பதியராய் இணைந்தே ஆற்றிடுவீர் காரியங்கள்...
வாழ்க்கை எனும் வசந்தங்கள் சூழ...
வாழ்கவென வாழ்த்துகிறோம்
வாழி ! வாழி !! வாழி !!!

பண்பாய் நாம் வளர்ந்திடவே...
பல கதைகள் கூறி நின்றே...
பட்சணங்கள் பல தந்து
பாசமழை பொழிந்து... தேசு கொடுத்திடும்...
எங்கள் தாத்தாவுடன் ... அம்மம்மாவும்...
நூறாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம். வாழி ! வாழி !! வாழி !!!

Best Wishes

வாழ்க்கையெனும் இலக்கியத்தில்....
இராமன் தேடிய சீதையாய்... சீதை தேடிய இராமனாய்...
நகமும் சதையும் போல இணைந்திருந்து
ஆல்போல் தழைத்தும் - வாழையடி வாழையாகவும் வாழ
நாற்பதாம் ஆண்டு திருமண நிறைவு நாளாம் ... இன்று
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்....
வாழ்க ! வாழ்க !! வாழகவே !!!

Best Wishes

**அன்புடன் வாழ்த்துவோர்:**
**"அமுதசுரபி" கூத்தாடியம்பதி, அல்வாய் வடக்கு, அல்வாய்.**
**பிள்ளைகள் - பிரசாந்த் (சுவிஸ்), சுரேகா, நிஷாந்த்**
**மருமக்கள் - கேசவன், பிரவீனா**
**பேரப்பிள்ளைகள் - அபிநயன், அக்ஷயா, அம்ஷயன், கிருஷிவ்.**

Best Wishes

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரண அ

## நாகநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றிவித்தல்



## வத்திலிங்கம்



யாழ். மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட நாகநாதர் வைத்திலிங்கம் அவர்கள் கடந்த (28.10.2022) வெள்ளிக்கிழமை காலை தனது **105**ஆவது வயதில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம்சென்ற சின்னம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலம் சென்ற நாகநாதர் தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும்,

குமாரசூரியர் (Swiss), குணரட்ணம் (UK, முன்னாள் ஆசிரியர் தெல்லிப்பளை மகாஜன கல்லூரி), காலஞ்சென்ற பரராஜசிங்கம் (வர்த்தகர், அக்குரஸ), திருஞானம் (கொழும்பு, வர்த்தகர்) மற்றும் மகாலிங்கம் (Canada), மகேஸ்வரி (Canada), காலஞ்சென்ற கனகலிங்கம் (நித்தியகல்யாணி ஜீவலரி, யாழ்ப்பாணம்) மற்றும் கனகேஸ்வரி (Canada), அரசரத்தினம் (Canada), அன்னலட்சுமி (France), மயில்வாகனம் (France) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

ஜெயலட்சுமி (Jaffna), சரஸ்வதி (UK), மங்கையற்கரசி (Colombo), நிர்மலா (Colombo), காலஞ்சென்ற மல்லிகாதேவி, சே.யோகநாதன் (Canada), குணேஸ்வரி (Jaffna), ந.யோகநாதன் (Canada, முன்னாள் உரிமையாளர் நித்தியகல்யாணி ஜீவலரி, யாழ்ப்பாணம்), விஜலட்சுமி (Canada), வேலும்மயிலும் (தொழிலதிபர், France), அருளினி (France) ஆகியோரின் மாமனாரும்,

காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, பாலசிங்கம், பூபதி, கருணைநாயகி, திருநாவுக்கரசு, குலசேகரம்பிள்ளை மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, இராசம்மா, நடராஜா, கணபதிப்பிள்ளை மற்றும் கண்மணி, மனோன்மணி, காலஞ்சென்ற நாகரட்ணம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும்,

இந்திராகாந்தி-சிவலிங்கம், வதனா- ஞானசபேசன், வாசுகி-ராஜன், நிமலன்-கவிதா, பிரதீபன், ரதீபன்-யசோதா, பிரபாகரன்-ஜலயா, பிரமிளா-சுதாகரன், சுபாசினி-சிவகுமாரன், சுதாகரன்- விஜிதா, சுதர்ஷினி-கவிதாஸ், சுபாகரன்- சுபாஜினி, சுகிர்தன்- ஷாமிலா, கஜன், நிரன்ஷலா-கோகுலன், செயந்தன்- வேணுயா, குகப்பிரியா- பாலகுமார், நித்தியா, ரமேஸ்காந்-பானுகா, லிங்காந்- தீபிகா, பிரியங்கா, சஞ்சிகா, கோகுலன்- சுகாஜினி, குபேரன்-ஸ்ரீவித்தியா, கோமகன், விதுஷன், அவினன் ஆகியோரின் பாசமிகு பேரனும்,

சோபினா-நிஜந்தன், ஷர்மினா, ஷஸ்வினா, சுஷானா, சுஷான், றொஷானி-கீர்த்தனன், றொஷாந், பிரவிந், நிதுசன், அஸ்வின், அர்னிஷ், அவிஷன், அவனீஷ், அத்தீஸ் அம்ருதா, ஆதேஷ், தக்ஷா, யாகுலன், யதுரன், ஆதீஸ், அஜித் , அபினா, கவின், கவினா, ஆதவன், ஆதனா, அஷ்ரித், அச்சுதன், ஆயகி, அன்விதா, ஆதிரா, யாஷ்சவி, அர்ஷன், அஜிதேஷ், சஷ்த்திகா, ஏஜேஜ், அத்தெனா, அறியானா, அஜானி, ஆதிஸ், அக்ஷ்யா, அக்ஷ்வியா ஆகியோரின் பூட்டனும்,

சபிராவின் கொள்ளுப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிமுதல் 6.00 மணிவரை பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2022) திங்கட்கிழமை முற்பகல் 9.30 தொடக்கம் பிற்பகல் 1.00மணி வரை இடம்பெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் .

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு: 077 540 9599, 011 2589885**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு நடாத்தும் வடக்கு மாகாண இளைஞர்களுக்கான குறும்படம் மற்றும் சுவரொட்டிப் போட்டி – 2022



### தொனிப்பொருள்:- போதை எனும் அழிவுப் பாதை

வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைக் **கல்வியை முடிவுறுத்திய** இளைஞர், யுவதிகளுக்கான **குறும்படம்** மற்றும் **சுவரொட்டிப்** போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

#### சுவரொட்டிக்கான நிபந்தனைகள்

- **படைப்பு:-** ஓவியம் (மட்டும்)
- **தாள்:-** Bristol board, Kent paper / வேறு பொருத்தமான வரைதாள்
- **அளவு:-** அகலம் 12 – 22.5, நீளம் 18 – 28.5 (அங்குலம்)
- **வர்ணம்:-** நீர் வர்ணம், எண்ணை வர்ணம், பஸ்ரல் (சோக்)

**பரிசுத்தொகை**

| | | |
|---|---|---|
| **முதலாமிடம்** | - ரூ | 15,000.00 |
| **இரண்டாமிடம்** | - ரூ | 12,000.00 |
| **மூன்றாமிடம்** | - ரூ | 10,000.00 |

#### குறும்படத்திற்கான நிபந்தனைகள்

- **கதாபாத்திரங்களின் எண்ணிக்கை:-** 05 இற்கு மேற்படாமல் இருத்தல்வேண்டும்
- **நேர எல்லை:-** 05 – 10 நிமிடங்கள்
- **பயன்படுத்தக்கூடிய பின்னணி இசை –** புத்துருவாக்க புதிய இசையமைப்புக்கு கவனம் கொள்ளல்வேண்டும், இல்லாதவிடத்து பதிப்புரிமம் அற்ற பின்னணி இசை

**பரிசுத்தொகை**

| | | |
|---|---|---|
| **முதலாமிடம்** | - ரூ | 75,000.00 |
| **இரண்டாமிடம்** | - ரூ | 70,000.00 |
| **மூன்றாமிடம்** | - ரூ | 65,000.00 |

**பொதுவான நிபந்தனைகள்**

1. வயதெல்லை : 19 – 40 வயதிற்குட்பட்டோர்
2. விண்ணப்ப முடிவுத்திகதி - 30.11.2022 புதன்கிழமை
3. பங்குபற்றுநர்களின் வதிவிடம்:- வடக்கு மாகாணத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு குறும்படம் அல்லது ஒரு சுவரொட்டி அல்லது இரண்டிலும் ஒவ்வொன்றிற்கே விண்ணப்பிக்க முடியும்.
5. சுவரொட்டியின் பின்பக்கத்தில் "சுய படைப்பொன்றாகும்" என தம்மாலேயே உறுதிப்படுத்தப்பட்டு பெயர், தே. அ. அ இல. வயது, முகவரி, தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை குறிப்பிடல் வேண்டும்.
6. மேற்குறித்த தொனிப்பொருளின் கீழ் எந்தவொரு வாக்கியமும் தமிழ், சிங்களம் அல்லது ஆங்கிலம் ஆகிய ஒரு மொழி மட்டும் உரித்துடையதாக சுவரொட்டியில் சேர்த்துக் கொள்ள முடியும்.
7. போட்டியில் கலந்து கொள்வதன் மூலம், படைப்பின் பதிப்புரிமை வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்கானதாகும் என்பதனை பங்குபற்றுநர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்.
8. போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை எமது இணையத்தள முகவரியான edumin.np.gov.lk, www.facebook.com\youthnorth மற்றும் https://bit.ly/3esA4gP இல் பெற்றுக்கொள்ள முடியும்.
9. போட்டிக்கு முன்னர் வேறு ஊடகங்களில் காட்சிப்படுத்தியதாகவோ அல்லது வேறு போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவோ அல்லது போட்டியின் பின்னர் வேறு ஊடகங்களுக்கு அல்லது போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படுதல் கூடாது.
10. போட்டிக்கு படைப்புக்கள் அனுப்பி வைக்கப்படும்போது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவமும் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
11. போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்ட படைப்புக்கள் பங்குபற்றுநர்களுக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்படமாட்டாது.
12. தேர்ச்சி பெற்ற நடுவர் குழுவொன்றின் மூலம் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் என்பதுடன் நடுவர் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
13. போதுமான அளவு ஆக்கங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து தரமான ஆக்கங்களுக்கு மட்டுமே பரிசில்கள் வழங்கப்படும்.
14. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "போதை எனும் அழிவுப்பாதை" எனக்குறிப்பிட்டு தபால் மூலம் அல்லது நேரடியாக விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி:
   உதவிச் செயலாளர் (இளைஞர் விவகாரம்)
   கல்வி அமைச்சு, வ.மா.
   செம்மணி வீதி,
   நல்லூர், யாழ்ப்பாணம்
15. போட்டி முடிவுகள் தினசரிப் பத்திரிகைகள் மற்றும் எமது இணையத்தள முகவரியான edumin.np.gov.lk இல் வெளியிடப்படும்.
16. வெற்றியீட்டிய குறும்படங்கள் எமது Youtube (https://bit.ly/3yBOUZk) இல் பதிவேற்றம் செய்யப்படும். சுவரொட்டிகள் மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களில் காட்சிப்படுத்தப்படும்.
17. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு இலக்கம் - 021 222 2203 (அரச வேலை நாட்களில் காலை 9:00 - மாலை 4:00 வரை)

இறுதித்திகதி வரை காத்திராது இன்றே விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி எமக்கு அனுப்பி வையுங்கள்.

**இ. வரதீஸ்வரன்,**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு, வ.மா.**

**YouTube https://bit.ly/3yBOUZk**
**facebook facebook.com/youthnorth**

## வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு நடத்தும் வடக்கு மாகாண இளைஞர்களுக்கான வீதிநாடகப் போட்டி - 2022




வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைக் **கல்வியை முடிவுறுத்திய** இளைஞர், யுவதிகளுக்கான **வீதிநாடகப்** போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **கதாபாத்திரங்களின் எண்ணிக்கை:-** 10 இற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்
- **கதாபாத்திரங்களின் வயதெல்லை:-** 19 - 40 வயதிற்குட்பட்டோர்
- **வீதி நாடகத்திற்கான நேர எல்லை:-** 15 – 25 நிமிடங்கள்
- **பயன்படுத்தக்கூடிய வாத்தியங்கள் -** நேரடி வாத்தியங்கள் மட்டும் (ஆர்மோனியம் மற்றும் தாள வாத்தியங்கள்)
- **பரிசு:** வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

ஒவ்வொரு பங்குபற்றுநர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| முதலாமிடம் | - ரூ | 75,000.00 |
| இரண்டாமிடம் | - ரூ | 70,000.00 |
| மூன்றாமிடம் | - ரூ | 65,000.00 |

- **விண்ணப்ப முடிவுத்திகதி -** 30.11.2022 புதன்கிழமை

**ஏனைய நிபந்தனைகள்**

1. பங்குபற்றுநர்களின் வதிவிடம்:- வடக்கு மாகாணத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
2. கதாபாத்திரங்கள் ஒரு வீதி நாடகத்தில் மட்டுமே பங்குபற்ற முடியும்.
3. போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை எமது இணையத்தள முகவரியான edumin.np.gov.lk, www.facebook.com\youthnorth மற்றும் https://bit.ly/3esA4gP இல் பெற்றுக்கொள்ள முடியும்.
4. போட்டிக்கு முன்னர் வேறு ஊடகங்களில் காட்சிப்படுத்தியதாகவோ அல்லது வேறு போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவோ அல்லது போட்டியின் பின்னர் வேறு ஊடகங்களுக்கு அல்லது போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படுதல் கூடாது.
5. தேர்ச்சி பெற்ற நடுவர் குழுவொன்றின் மூலம் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் என்பதுடன் நடுவர் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
6. போதுமான அளவு ஆக்கங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து தரமான ஆக்கங்களுக்கு மட்டுமே பரிசில்கள் வழங்கப்படும்.
7. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நில் கவனி முன்னே கடவை" எனக்குறிப்பிட்டு தபால் மூலம் அல்லது நேரடியாக விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி:
   **உதவிச் செயலாளர் (இளைஞர் விவகாரம்)**
   **கல்வி அமைச்சு, வ.மா.**
   **செம்மணி வீதி,**
   **நல்லூர், யாழ்ப்பாணம்**
8. போட்டி முடிவுகள் தினசரிப் பத்திரிகைகள் மற்றும் எமது இணையத்தள முகவரியான edumin.np.gov.lk இல் வெளியிடப்படும்.
9. வெற்றியீட்டிய வீதிநாடகங்கள் மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களில் காட்சிப்படுத்தப்படும்.
10. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு இலக்கம் - 021 222 2203 (அரச வேலை நாட்களில் காலை 9:00 - மாலை 4:00 வரை)

இறுதித்திகதி வரை காத்திராது இன்றே விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி எமக்கு அனுப்பி வையுங்கள்.

**இ. வரதீஸ்வரன்,**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு, வ.மா.**

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு நடாத்தும் வடமாகாண இளைஞர்களுக்கான 03 மாதகால ஆரம்ப மட்ட கராத்தே மற்றும் சிலம்பக்கலை இலவச பயிற்சிநெறிகள்

வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் வல்லமைகாண் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலைக் **கல்வியை முடிவுறுத்திய** இளைஞர், யுவதிகளுக்கான **கராத்தே** மற்றும் **சிலம்பக்கலை** 03 மாதகால ஆரம்ப மட்ட இலவசப் பயிற்சி வகுப்புகள் இரு கட்ட அணிகள் தமது பயிற்சிநெறியினை விரைவில் பூர்த்தி செய்யவுள்ளதால் புதிய கட்டத்திற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின் அந்தந்த மாவட்டங்களிலேயே பயிற்சிநெறியினை ஆரம்பிக்கப்படும்.

மகளிருக்கான பயிற்சிகள் பயிற்றப்பட்ட பெண் வளவாளரினாலேயே பயிற்றுவிக்கப்படும்.

**வயதெல்லை :** 19 வயதுக்கு மேல்
**விண்ணப்ப முடிவுத்திகதி - 18.11.2022** வெள்ளிக்கிழமை
**ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.**
**பங்குபற்றுநர்களுக்கு பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.**
விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதும் வார நாளொன்றில் கடமை நேரத்தில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

**விண்ணப்பப் படிவத்தின் மென்பிரதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இணையத்தளங்கள்**
http://edumin.np.gov.lk, https://bit.ly/3SsbJq3

**தொடர்பு இலக்கம்**-021 222 2203 (அரச வேலை நாட்களில் காலை 9:00-மாலை 4:00 வரை)

இறுதித்திகதி வரை காத்திராது இன்றே விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி எமக்கு அனுப்பி வையுங்கள்.

**அனுப்பி வைக்கவேண்டிய முகவரி**
உதவிச் செயலாளர் (இளைஞர் விவகாரம்)
கல்வி அமைச்சு, வ.மா.
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

**இ. வரதீஸ்வரன்,**
செயலாளர்
கல்வி அமைச்சு, வ.மா.

**facebook facebook.com/youthnorth**
**YouTube https://bit.ly/3yBOUZk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள் நினைவலைகள்



கண்மகிழ 30 . 10 . 1985

கண்நெகிழ 18 . 05 . 2018

## அமரர் கோபாலபிள்ளை குகன்

(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-அதிசிறப்புத் தரம்)

சிரிப்பழகும் நடையழகும் சினக்காத பேச்சழகும்
உரித்துடைய உத்தமனை வரமாய் பெற்ற பொன்நாள் - இந்நாள்.
தேடுகிறோம் நின் திருமுகத்தை நீள்துயில் கொண்டு
பேசாமல் மௌனமாய் போனதெங்கே?
எம்மனை சிறக்க இம்மண்ணிலே வந்துதித்த குலக்கொழுந்தே!

சேர்த்து வைத்த ஆசையெல்லாம் நொடிப்பொழுதில் சிதைந்திட
மூர்க்கம் கொண்ட உன் சாரதியின் செயலால்
கண்ணிமைக்கும் பொழுதினில் விண்ணிலே மறைந்தீரோ - நம்
விழிகளை கலங்கவிட்டு.
பாரினிலே உன் பணிகள் மீதமுள்ளதடா
பாதியிலே பயணத்தை முடித்து விழி மூடியது தகுமோ!

பாசத்தால் எமை கட்டிப்போட்டு பக்குவமாய் நேசித்தவனே!
கடந்து போன இனிய நாட்களை நெஞ்சமதில் சுமந்தபடி
காலமெல்லாம் கலங்கி நிற்க காலனவன் எழுதி வைத்தான்
ஆயுள் உள்ளவரை என்றும் உறங்காது உங்கள் நினைவு...

கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்.

உந்தன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர் (வேலணை மேற்கு-8)

### சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

# விண்ணப்பம் கோரல்

சங்கத்தினால் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தினை ரூபா.20/- செலுத்தி பெற்று பூரணப்படுத்தி பிறப்புச்சான்றிதழ். கல்வித்தகைமைச்சான்றிதழின் பிரதிகளுடன் 14.11.2022ம் திகதிக்கு முன்னதாக **"பொதுமுகாமையாளர். சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து). கண்டி வீதி. சாவகச்சேரி."** எனும் முகவரிக்கு தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**01.பதவி : கிளைமுகாமையாளர் தரம்208/14**
**சம்பள குறியீட்டு இல : 208/14 ( சுற்.நிரு இல: 02/2020இன்படி)**
சம்பள அளவுத்திட்டம் : ரூபா 17900-155X10-165X10-ரூபா21100 (சு.நி.இ.02/2022)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச்சுற்றறிக்கை 02/2022க்கு/ அமைய படிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள்**

**அ)** கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். /கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

**ஆ)** கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. /க.பொ.த.சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி. கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**02.பதவி : எரிபொருள்நிரப்புனர் தரம்313/16**
**சம்பள குறியீட்டு இல : 313/16 (சுற்.நிரு இல: 02/2020இன்படி)**
சம்பள அளவுத்திட்டம் . ரூபா 16975-135X10-150X10-ரூபா19825 (சு.நி.இ.02/2022)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச்சுற்றறிக்கை 02/2022க்கு அமைய படிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வேறு கூட்டுறவுச்சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தாங்களின் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
இப்பதவிகளுக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து பிணை சங்கத்தில் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம். கண்டி வீதி சாவகச்சேரி. பொதுமுகாமையாளர்
**30.10.2022**

# மரண அறிவித்தல்



மண்ணில் 14 . 09 . 1953

விண்ணில் 27 . 10 . 2022

## அமரர் இராசதுரை சந்திரகுமாரி

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வேலம்பிராய் மற்றும் கைதடி தெற்கு APC வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை சந்திரகுமாரி கடந்த (27.10.2022) வியாழக்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன்-ஐயாள் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தன் சின்னப்பிள்ளையின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசதுரையின் பாசமிகு மனைவியும் ராஜ்குமார், இராஜதீபன், அனுசா, லக்சிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயபிரதா, பிரியா, லோகநாதன், மயூரன் ஆகியோரின் அன்பு மாமியும் நிலக்சனா, அக்ஷயன், ஆருஜன், டிவேனிகா, அர்வின், அரிஷ், மிலோஜன், லக்ஷாயினி, மதுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அமரர் ஐயாத்துரை, துரைசிங்கம், ஜெயராஜசிங்கம், உலகநாதன், இந்திரராசா, பவளம், கமலம், தவமணி, பகவதி, தங்கமலர், இராசமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்று தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**APC வீதி,**
**கைதடி தெற்கு,**
**கைதடி**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**0769760773, 0774020641**

# மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 01 . 1971

இறப்பு 29 . 10 . 2022

## திருமதி முருகேஸ் நிறஞ்சனா

இல. 195, ஓட்டுமடம் மானிப்பாய் வீதியை பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேஸ் நிறஞ்சனா அவர்கள் நேற்று (29.10.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மகேஸ்வரி தம்பதியரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் கமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும், அமரர் ஆறுமுகம் முருகேஸனின் அன்பு மனைவியும், முரளிதரன், முகுந்தன், முகிலன், கௌசி, முகிந்திரன், முரளிகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வேணுயா, ஸ்ரீஸ்கந்தராஜா, அகிலா ஆகியோரின் அன்பு மாமியாரும், மதுவர்ஷாவின் பாசமிகு பேர்த்தியும், நளாயினி, வாசுகி, சியாமினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராஜேந்திரன், விஜயகுமார், சுகந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் சுதுமலை தெற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**077 033 3393**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 21438) 1/6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## மகேசு பார்த்திபன்

(ஆசிரியர் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி)

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், வவுனியா நெடுங்கேணி, கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மகேசு பார்த்திபன் கடந்த (30.08.2022) செவ்வாய்க்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் செல்லத்தம்பி மகேசு (இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்- வடக்கு-கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம்), வேதநாயகி (இளைப்பாறிய ஆசிரியை- யாழ்.சென் ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) தம்பதிகளின் அன்புப் புதல்வனும், நல்லையா சுபாரட்ணம் கமலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், தர்மினி (ஆசிரியை - கோப்பாய் தெற்கு, றோ.க.த.க பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், ஆரணன், மிகிரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மைதிலி (பிரதி அதிபர் - யாழ்.சென் ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), Dr.பிரதீபன் (போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), கேமமாலதி (TRT தமிழ்ஒலி வானொலி, பிரான்ஸ்), காலஞ்சென்ற உமாபாரதி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

தேவராஜா (இலங்கை), Dr.சிவதி, பொன்னம்பலம் (பிரான்ஸ்), செந்தூரன் (ஹொலண்ட்), குருபரன் (இலங்கை), மயூரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், பிரதீபா (ஹொலண்ட்), சசிரேகா (இலங்கை), ராஜினி (கனடா) ஆகியோரின் சகலனும், சேயவன், ஆத்மிகா ஆகியோரின் ஆசைப் பெரியப்பாவும், கஜார்த்தன், கெவின், சுபாஷ், அபிராமி, அட்சயன், அனித்தன், அஸ்வினி ஆரபி, ஆதீசன், நித்தீஷ் ஆகியோரின் ஆசை மாமாவும் ஆவார்.

இறுதி ஆராதனை
Sunday 30 October 2022
9.30 PM – 10.30 PM இலங்கை நேரம்
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs. 18565) (2.6)

தகவல்: குடும்பத்தினர்.

# பணியாளர் தேவை

எமது **கல்வி நிறுவனம்** கீழ்வரும் பணியாளர்களை எதிர்பார்க்கின்றது.

1. வகுப்பு மேற்பார்வையாளர் (பெண்)
2. சிற்றுண்டிச்சாலை காசாளர்/ ஊழியர் (பெண்)

நாளை (31.10.2022) திங்கட்கிழமை
மதியம் 2.00 மணிக்கு நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்கவும்.

**021 221 6690 - 077 336 4055**

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யமான கல்வி நிறுவனம்
(Navalar Road - Brown Road Junction, Jaffna)

(cr.38369) (2.6)

# அந்தியேட்டி அழைப்பு

மகிழ்வில் 10 - 05 - 1948



நெகிழ்வில் 01 - 10 - 2022

## அமரர் நேசரத்தினம் வசந்தமல்லிகா

01.10.2022 அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் செய்தி கேட்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் நேரில் வந்து உதவி செய்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு நிகழும் 31.10.2022 திங்கட்கிழமை நாளை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் இதனைத் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் பங்குபெறுவதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி, தொண்டைமானாறு

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சின்னம்மா

இராசாவின்தோட்டம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாய், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சின்னம்மா கடந்த (27.10.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிராமு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமு - சின்னன் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராமு சின்னத்துரையின் அன்பு மனைவியும், அரியநாயகம், காலஞ்சென்றவர்களான மனோரஞ்சிதம் (சுசிலா), ஜெயமணி மற்றும் சாரதாதேவி (சாந்தா), செல்வராசா, சேகர், ரமேஸ்வரன் (ரமேஷ்) ஆயோரின் பாசமிகு தாயாரும், நாகேஸ்வரி, கணேசலிங்கம், அமுதமலர் (சித்ரா), நாகராசா, ராசமலர், நிர்மலா (சஞ்சு), அற்புதமலர் (கவிதா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிரிசாந்தன், கிருசாந்தி, பிரசாந்தன், கஜீன்தன், கஜீந்தினி, கிசோ, றசோ, சுகிர்காந்த், சுரேஷ்காந்த், கவிதா, தர்ஷினி, யுதிஷன், பிரசாத், சாரங்கன், சிந்துஜா, சரண், வினோஜ் சஜிதன், துவாரகா, மதுக்ஷ், சஞ்ஜய், சகிலா, பிரியா, தர்சிகா, ஸ்ரீ குமரன், கவிதா, புஜிதா, நிலானிகா, வினோதரன், தனுஷ்ரூபன், துஷியந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வினோஷன், கனுயன், லதுசா, துஷானிகா, மதுரிகா, மானுஷா, றுதீஷ், பிரிவிந்த், றியா, கஸ்வின், ஷ்மியா, ஈஷா, கஷ்மினா, கனிஷ்கா, தகிஷ், மிசான், நிகிஷா, தஸ்வின், நன்சிகா, சகிந்த், சகிசா, தனீஷா, அக்ஷ்யன், கவிஷ்கா, நித்தோஸ் மற்றும் லிஷானா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



தகவல்:
குடும்பத்தினர்

50/6, தேவாலய வீதி,
பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு.

whatsapp - 077 619 4517
077 504 0164

பிறப்பு 24.06.1930

இறப்பு 27.10.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமூக விரோதிகள் பலர் அரசியல் பலமுள்ளோரே!

*முன்னாள் எம்.பி சந்திரகுமார் சாட்டை*

**யாழ்ப்பாணம், ஒக். 30**

**சட்ட விரோத மணல் அகழ்வு, காடழிப்பு, கசிப்புக் காய்ச்சுதல் போன்றவற்றில் ஈடுபடுவோரில் அதிகமானோர் சில அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களாக, உறுப்பினர்களாக உள்ளனர் - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; காணி அபகரிப்பு, ஊழல் முறைகேடுகள், நிர்வாகச் சீரழிவுகள் என எமது சமூகம் சீரழிந்துகொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது வடக்கில் மட்டுமன்றி நாடு முழுவதும் போதைப்பொருள் பாவனை இளைஞர்களிடத்தில் அதிவேகமாகப் பரவி இளைய சமூகத்தை சீரழித்து வருகின்றது.

போதைப்பொருள் பாவனை என்றுமில்லாத அளவுக்கு வடக்கில் தலைதூக்கியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய தரப்பினர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இதுவொரு திட்டமிட்ட நிகழ்ச்சிநிரலா? என்ற சந்தேகமும் பொதுமக்கள் மத்தியில் வலுவாகக் காணப்படுகிறது. இது தொடர்பில் ஊடகங்கள், சமூக மட்ட அமைப்புக்கள், அரசியல் தலைமைகள், பொலிஸ் மற்றும் சட்டத் தரப்புகள் ஒருங்கிணைந்து செயற்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியது மிகமிக அவசியமானது. ஏனெனில் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட இளைய தலைமுறையே போதைப்பொருள் பாவனையில் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இளைய தலைமுறை பாதிக்கப்பட்டால் எதிர்காலச் சமூகமே பாதிப்புக்குள்ளாகும் - என்றார். (ம-14,214)


## எதிர்காலத்தை வர்ணமயமாக்கும் சக்திவாய்ந்த முதலீடு

கொமர்ஷல் கிரெடிட்

## நிலையான வைப்பு

(முதிர்வின் போது வட்டி வீதங்கள்)

ஒரு மில்லியனுக்கு குறைவாக

| காலம் | முதிர்ச்சி | ச.வ.வீ |
|---|---|---|
| 3 | 27.00% | 29.86% |
| 5 | 29.00% | 31.49% |
| 8 | 25.00% | 26.01% |
| 12 | 26.00% | 26.00% |

ரூ.1–5 மில்லியன் வரை

| காலம் | முதிர்ச்சி | ச.வ.வீ |
|---|---|---|
| 3 | 27.25% | 30.16% |
| 5 | 29.25% | 31.79% |
| 8 | 26.00% | 27.10% |
| 12 | 27.00% | 27.00% |

ரூ.5–10 மில்லியன் வரை

| காலம் | முதிர்ச்சி | ச.வ.வீ |
|---|---|---|
| 3 | 27.50% | 30.47% |
| 5 | 29.50% | 32.08% |
| 8 | 27.00% | 28.18% |
| 12 | 28.00% | 28.00% |

ரூ.10–50 மில்லியன் வரை

| காலம் | முதிர்ச்சி | ச.வ.வீ |
|---|---|---|
| 3 | 27.75% | 30.77% |
| 5 | 29.75% | 32.37% |
| 8 | 27.25% | 28.45% |
| 12 | 28.25% | 28.25% |

ரூ.50–100 மில்லியன் வரை

| காலம் | முதிர்ச்சி | ச.வ.வீ |
|---|---|---|
| 3 | 28.50% | 31.69% |
| 5 | 30.00% | 32.67% |
| 8 | 27.50% | 28.72% |
| 12 | 28.50% | 28.50% |

ரூ.100 மில்லியனுக்கு மேல்

| காலம் | முதிர்ச்சி | ச.வ.வீ |
|---|---|---|
| 3 | 29.50% | 32.93% |
| 5 | 30.50% | 33.26% |
| 8 | 28.00% | 29.27% |
| 12 | 29.00% | 29.00% |

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் செயற்படுத்தப்படும் இலங்கை வைப்புக்க் காப்புறுதி திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட வைப்பின் பொறுப்பு காப்புறுதி செய்யப்பட்டுள்ளதால் ஒரு வைப்பாளர் அதிகபட்சமாக ரூபா. 1,100,000/- வரையான இழப்பீட்டை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

*குறிப்பிடப்பட்ட வட்டி வீதங்கள் 10-10-2022ஆம் திகதியிலிருந்து செலுத்தப்படும் மற்றும் CBSL விதிமுறைகளின்படி மாற்றத்திற்கு உட்பட்டவை

0112 000 000

கொமர்ஷல் கிரெடிட் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி

இல. 106, யட்டிநுவர வீதி, கண்டி. தொ.பே இல: 081 2 000 000

இல. 165, கின்சி வீதி, கொழும்பு 08. தொ.பே இல: 011 2 111 000

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் அளிக்கப்பட்ட நிதிக்கம்பனியாகும். பதிவு இல: PB 269 PQ கூட்டிணைக்கப்பட்ட திகதி: 04.10.1982 | ICRA Rating (SL) BBB Stable

COMMERCIAL CREDIT


# பூசகர் மீது தாக்குதல் சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக். 30

வேலணை அம்மன் கோவில் பகுதியில் பூசகர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேபகுதியைச் சேர்ந்த நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர். சந்தேகநபர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-23)



பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தி சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்தும் விதமாக மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான வதிவிட பயிற்சி முகாம் அடம்பன் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நேற்றும் நேற்றுமுன்தினமும் முன்னெடுக்கப்பட்டது. (ம-56)

# சிறுவன் மீது வாள்வெட்டு சந்தேகநபருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 30

இணுவில் பகுதியில் 17 வயது சிறுவன் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் கைதான சந்தேகநபர் எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு சமூக விரோதச் செயல்களின் ஈடுபட்ட குழுவொன்றின் நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், அவர் நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதையடுத்தே குறித்த நபரை எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-125)

# பாடசாலைக்கு முன் மலக்கழிவு வீசும் விஷமிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் குரல்!

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம், புனித ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக மனித மலக்கழிவுகளை விஷமிகள் சிலர் வீசியுள்ளனர். இதனால், பாடசாலை மாணவர்கள், பொதுப்போக்குவரத்தாளர்கள் மற்றும் அந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

'பம்பஸ்' அடங்கிய மனித மலக்கழிவுகள் இனந்தெரியாதோரால் கொட்டப்பட்டுள்ளன. இந்த அநாகரிக செயற்பாடு குறித்து மாநகரசபைக்கு அறிவிக்கப்பட்டது. அப்புறப்படுத்தும்போது அதனுள் மோட்டார்சைக்கிள் காப்புறுதி அட்டை ஒன்றை மீட்டுள்ளனர். அதனடிப்படையில் கழிவுகளை வீசியோரைக் கண்டறிந்து, அவர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பணிப்பெண் தேவை**

தங்கிஇருந்து வீட்டு வேலை பார்க்க பணிப்பெண் தேவை.

**0772987506**

**ஆவணங்கள் தவறிவிட்டது**

28.10.2022 வெள்ளிக்கிழமை அன்று யாழ் பேருந்து நிலையத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன் சென்ற தனியார் பேருந்தில் த. தமிழினி ஆகிய எனது 956561507V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை B-4661762 இலக்கமுடைய சாரதி அனுமதிப்பத்திரம் வங்கி இலத்திரணிய அட்டைகள் என மேலும் சில முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. இவ் ஆவணங்கள் அடங்கிய கைப்பையைக் கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்புகளுக்கு:-

**0774932029**

இந்தியப் பெருங்கடல்

# இராணுவ வல்லாதிக்க சக்திகளின் மோதல் களமாக இருக்கக்கூடாது

## இந்தியாவில் வைத்து வலியுறுத்தியது இலங்கை

புதுடில்லி, ஒக். 30

இந்தியப் பெருங்கடல் உலக இராணுவ சக்திகளின் மோதலுக்குரிய பகுதியாகவோ அல்லது விளையாட்டு மைதானமாகவோ இருக்கக்கூடாது என்று இலங்கை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வது, நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமான பங்கு என்று இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற பாதுகாப்பு சார் கண்காட்சியில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் முழுவதும் உள்ள கடல்சார் இராஜதந்திரத்தை மற்ற பெருங்கடல்களுடன் இணைவதற்கு மேலும் வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை - இலங்கை எந்தவொரு இராணுவக் கூட்டணியிலும் பங்கேற்காது என்றும், பசுபிக் பிராந்தியத்தின் பிரச்சினைகள் இங்கு வருவதை விரும்பவில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு செப்ரெம்பர் மாதம் ஆற்றிய உரையையும் அவர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார். உலக வல்லரசுகளின் போட்டியிலிருந்து இலங்கை எப்போதுமே விலகி இருக்கும் என்றும் இந்தப் போட்டிகள் எதுவும் இந்தியப் பெருங்கடலில் மோதலுக்கு வழிவகுக்காது என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்ததையும் அவர் நினைவுகூர்ந்தார்.

(அ-ஒ-இ)

# மின்விளக்குகள் பழுது; புதுப்பிக்கக் கோரிக்கை

உள்ளூராட்சி சபைகளால் வீதிகளில் பொருத்தப்பட்ட மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அவற்றைப் புதுப்பித்து வழங்குமாறு பொதுமக்கள் உள்ளூராட்சி சபைகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.


உள்ளூராட்சி சபைகள், வருடாந்தம் உறுப்பினர்கள் மூலம் வட்டார ரீதியில் வீதி விளக்குகளைப் பொருத்தியுள்ளன. அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கப்படும் நிதியுதவியுடனும் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. தற்போது அவற்றில் பெரும்பாலான விளக்குகள் பழுதடைந்து வீதிகள் இருளில் காணப்படுகின்றன. அத்துடன் தற்போது திருடர்களின் நடமாட்டம் அதிகம் காணப்படுவதால் திருடர்களை இனங்காண முடியவில்லை. மேலும் இரவு வேளைகளில் தூர இடங்களிலிருந்து வருவோர் தமது வீடுகளுக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றைக் கருத்திற்கொண்டு பழுதடைந்து காணப்படும் மின்விளக்குகளைப் புதுப்பித்து வழங்குமாறு பொதுமக்கள் உள்ளூராட்சிசபைகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக உள்ளூராட்சிசபைகளிடம் கேட்டபோது, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மின் தட்டுப்பாடு காரணமாக முதன்மை வீதிகள் தவிர்ந்த ஏனைய வீதி விளக்குகளை ஒளிரவிடவேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீதி விளக்கு பொருத்துதல் மற்றும் பழுது பார்க்கும் பணிகளை இலங்கை மின்சார சபையினரே மேற்கொள்வதால் புதுப்பிக்கும் நடவடிக்கைகளுக்கு மின்சார சபை ஊழியர்கள் வருகை தரமாட்டார்கள். எனவே, மின் தட்டுப்பாடு நீங்கும் வரை மின்விளக்குகள் பொருத்துவது நிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

(ஒ-14,9)

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 02 . 1951



இறப்பு 28 . 10 . 2022

**ஐயம்பிள்ளை யோகலிங்கம் (சின்ராஸ்)**

(J.K.T. ரான்ஸ்போர்ட் உரிமையாளர் )

சரசாலையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் பரித்திக்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை யோகலிங்கம் (சின்ராஸ்) 28.10.2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

0776283042

## மரண அறிவித்தல்

**அமரர் செல்வி பரமேஸ்வரி குணரட்ணம்**

தோற்றம் 25.05.1945

மறைவு 25.10.2022

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பரமேஸ்வரி குணரட்ணம் அவர்கள் (25.10.2022) செவ்வாய்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் சுன்னாகத்தை சேர்ந்த காரத்திகேசு குணரட்ணம்- சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புப் புதல்வியும் தேசதாசன் (UK), Dr.ரவிகுலதிலகம் (மைசூர்-இந்தியா), ரவீந்திரன் (கனடா), சரோஜினி (UK), ராதாகிருஷ்ணன் (UK), சிவபாலன் (ஓய்வுநிலை பொறியியலாளர் - இலங்கை), ஸ்ரீரஞ்சினி (ஜேர்மனி), இளங்கோவன் (UK), காலஞ்சென்ற ரஜனி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2022) திங்கட்கிழமை கனடா -ரொரன்ரோவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர், சகோதரன் கு.சிவபாலன்

109, 3ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்

021 222 9411

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 06 . 1942



இறப்பு 29 . 10 . 2022

**கிருஸ்ணபிள்ளை கமலாதேவி**

மந்துவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை கமலாதேவி 29.10.2022 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சி.கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் இந்திராணி, சந்திராதேவி, திருச்செல்வம், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற இராசமலர், செல்வரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் இடம்பெறும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்
## தொடர்பானது



திருமதி
## அருள்நங்கை சண்முகநாதன்

(ஆரியகுளம் யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரி இயக்குனரும், பிரபல இந்து நாகரீக விரிவுரையாளரும்)

கடந்த (27.10.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அஞ்சலிக்காக முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை ஆரியகுளம் யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரி வளாகத்தில் வைக்கப்பட்டு பின்பு காக்கைதீவு கரையாண்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவ சமூகத்தினர், ஆசிரியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(cr.38380 (2.6)

# வீதியோர யாசகர்களும் மேடையேற முடியுமாம்!
### ராஜபக்சக்களை சாடும் மைத்திரி

கொழும்பு, ஒக். 30

'வீதியில் திரியும் யாசகர்களுக்கும் மேடையேற முடியும். எனவே, எந்த மேடையில் ஏறினாலும் மொட்டுக் கட்சியால் மீண்டெழ முடியாது' என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்று தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை முழுமையாக ஆராய்ந்த பின்னரே, அது விடயத்தில் எவ்வாறானதொரு முடிவை எடுக்கலாம் என்ற நிலைப்பாட்டுக்கு வரலாம். ஆயினும் ஜனாதிபதியின் பயணத்தை மொட்டுக் கட்சி தடுக்கவே முற்படும். 'மீண்டெழுவோம், மீண்டெழுவோம்' என மொட்டுக்கட்சியினர் கூளுரைக்கின்றனர். அவர்கள் எப்படி மீண்டெழுவார்கள் எனத் தெரியவில்லை. அது நடக்கப்போவதும் இல்லை. ஏனெனில் வீதியில் திரியும் யாசகர்களுக்குகூட மேடை ஏற முடியும். எனவே, யார் வேண்டுமானாலும் கூட்டங்களை நடத்தலாம். ஆனால், ராஜபக்சக்கள் மீண்டெழ முடியாது' எனவும் மைத்திரி குறிப்பிட்டார். (அ-ஒ-44)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-
- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்
077 986 5457
077 814 7389


# மரண அறிவித்தல்
## சிவராமலிங்கம் மகேஸ்வரி



தோற்றம்
04.04.1947

மறைவு
29.10.2022

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தினை சேர்ந்த சிவராமலிங்கம் மகேஸ்வரி நேற்று (29.10.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான, கதிரவேலு முத்தாச்சி தம்பதியரின் மகளும், செல்வரட்ணம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சிவராமலிங்கம் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், சிவதரன் (வடபிராந்திய முகாமையாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அருமைத் தாயும், கலைச்செல்வி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு ஆணைக்குழு) அவர்களின் அன்பு மாமியும், இனோஜன், கர்சினி, மகிசன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, பேரம்பலம், நகுலாம்பிகை, பரமானந்தசிவம் மற்றும் இலட்சனையதேவி, சண்முகராசா, கிருபாதேவி, கண்ணுத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், துரைசிங்கத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

192, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகன் சிவதரன்
077 5023 457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 30

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2022 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய யாழ்ப்பாணப் பிரதேசசெயலகப் பிரிவில் நிரந்தர மாக வசிக்கும் 60 வயதைப் பூர்த்தி செய்து கலைக்கு அளப்பரிய சேவையாற்றிய கலைஞர்கள், பிரதேசசெயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேசசெயலக கலாசாரப் பிரிவில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணப் பிரதேசசெயலர் எஸ். சுதர்சன் அறிவித்துள்ளார். (ஓ-14)

# புத்தூர் பொதுநூலகத்தின் வாசிப்பு மாத பேரணி

யாழ்., ஒக். 30

வலி.கிழக்கு பிரதேசசபையின் புத்தூர் பொதுநூலகத்தால் வாசிப்பு மாதத்தையொட்டி, வாசிப்பு மாத பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

வாசிப்புப் பழக்கத்தை மாணவர்கள், பொதுமக்களிடத்தே ஊக்குவிக்கும் முகமாக புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மாணவர்களுடன் புத்தூர் பொது நூலகமும் இணைந்து புத்தூர் சந்தியில் இருந்து சோமஸ்கந்தா கல்லூரி வரையான நடைபவனி பேரணி நாளை திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

பேரணி நிறைவடைந்த பின்னர் கல்லூரி மண்டபத்தில் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசனின் சிறப்புரையும் இடம்பெறவுள்ளது என்று வலி. கிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-14)


## பெண் வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் உள்ள கடையொன்றிற்கு 30 வயதுக்குட்பட்ட பெண் வேலையாள்கள் தேவை. வேலை நேரம்: காலை 8.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரை.

077 937 0000, 075 988 1000

## ENGLISH CLASSES

SPOKEN ENGLISH WITH GRAMMAR
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள் தொழில் புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு
G.C.E O/L Literature
K.Ganesh B.A 077 766 8725

## மணமகள் தேவை

1989 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 7 இல் செவ்வாய், லண்டன் PR உள்ள மணமகனுக்கு ஓரளவு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை.

075 510 3630

## வேலையாள்கள் தேவை

Accounts செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை. மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. உங்கள் சுயவிபரக் கோவையினை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

No.77, Luxan Enterprizes
Oldpark Road, Junction, Kandy Road. Jaffna.
070 511 5335
(cs.47354) (2.6)

## பணிப்பெண் தேவை

யாழ்நகரில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

077 724 2362
(cs 47352) (2.6)

## விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு கயட்டைப்புலம் வீதியில் நிலப்பரப்பு முறையே 10, 4 இரண்டு காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 843 5502, 074 373 9982

## தேவை

வேப்பம் விதை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் எடுக்கப்படும்.

0779974311

## அமெரிக்க லொத்தர் இலவச விசா

இன்னும் எட்டு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
0768226244

## மின்சாரம் துண்டித்து விட்டதா? மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?

இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்

சகல விதமான மின்சாரப் பொருட்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும்

J.J GROUP
No. 603, K.K.S, Road, Jaffna
021 222 8854, 077 555 5100
(CS 21133)(3/6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்புக் காணி விற்பனைக்கு

- மூன்று பரப்பாகவும் நான்கு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- 18 பாதையுடன், நன்னீர் ஊற்று நிலம், நல்ல சூழல்
- 775 வழி பேரூந்துகள் செல்லும் காபற் வீதி
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி அருகாமையில்
- புத்தூர் சந்தியில் இருந்து 1½ Km தூரம் (சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து)
- 1 பரப்பின் விலை 2 லட்சம்

தொடர்புகளுக்கு: 077-6585999, 076-7558606

## தரமான பொருட்கள் விற்பனை

TVM Transport ல் கட்டடப் பொருட்களான 3/4 சல்லி, 6/9 அத்திவாரக்கல், கிரஸ், டஸ்ட் போன்ற தரமான பொருட்கள் மிகவும் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்.

TVM Transports
கோப்பாய்
0777666620

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை

அவர்களின் மறைவில் கலந்துகொண்டு எமது துயரில் பங்கெடுத்து இறுதிக் கிரியையிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளைமறுதினம் (01.11.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல: 870, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
(er 38374) (2.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 12 ½ பரப்புக் காணி விற்பனைக்கு

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி) யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 ½ KM தூரம்
- பார்வையிடும் நேரம்: காலை 08.00 - மாலை 5.30
- ஒரு பரப்பின் விலை : 6 இலட்சம் ரூபா

தொடர்பு: 077 874 8135, 077 408 2649

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, இல.7, காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் அமைந்துள்ள ஒருபரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

0772948937, 0754506927, 0702201710

## நீர்க்கசிவுக்கான இரசாயனப் பொருட்கள்

மழைக் காலத்தில் உங்கள் கட்டடங்கள் கூரைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை எங்களிடம் இரசாயனப் பொருள்களை பெற்று எமது தொழில்நுட்ப உதவியுடன் நீங்களே சீர்செய்து கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்

FINEX

போலிகளைக் கண்டு ஏமாற வேண்டாம்

உலகத் தரமிக்க இரசாயனப் பொருள்களை ஏக விநியோகஸ்தர் ஆகிய எம்மிடம் விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

North & East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.North & East engineering.com




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்தழிந்து போனாலும் சீரழிந்து கெட்டாலும்
சொத்தழிந்து போனாலும் சோரேன் தமிழுக்கென
முத்தமிழ் விழாவில் முழங்கியவர் மேடையிறங்கி
சத்தமாய் கத்தினார் சண்டேயிலும் கிறவுட்டில்லை!
- காரைக்கவி

Registered as a Newspaper

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஐப்பசி 13 ஞாயிற்றுக்கிழமை (30.10.2022) சிகரம் : 122



# சீன - இந்திய உறவும் அமெரிக்காவும்!

## தேச நலனைக் கருத்தில் எடுத்து தமிழர் விவகாரத்தைப் புறம்தள்ளும் டில்லி



○ அ.நிக்ஸன்

ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில், ரஷ்யாவைத் தனிமைப்படுத்த ஐரோப்பிய நாடுகள் எடுத்துள்ள கடும் முயற்சிகளுக்கு மத்தியில், சீனா தனித்து நின்று ரஷ்யாவுக்குத் தேவையான ஆதரவை வழங்கி வருகின்றது. ஆனால் இதுவரையும் சீனா, ரஷ்யாவுக்கு ஆயுதங்கள் எதனையும் வழங்காத சூழலில், ரஷ்யாவை ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகள் முன்னிலையில் தனித்துவம் மிக்கதாகக் காண்பிக்கவே சீனா முற்படுகின்றது. அமெரிக்க எதிர்ப்பு நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்று, உலக அரசியல் ஒழுங்கில் மாற்றத்தைக் காண முற்படும் சீனா, முடிந்தவரை அமெரிக்காவுடன் இணங்கிச் செல்லும் காய்நகர்த்தல்களிலும் ஈடுபடுகின்றது. சீன - ரஷ்ய உறவின் பின்னணியிலேயே இந்தியா மூலோபாயங்களை வகுத்தாலும், இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் தனித்த வல்லாதிக்கம் மிக்க நாடாக மிளிர வேண்டுமென்ற இந்தியக் கனவுக்கு, அமெரிக்கா இடம்கொடுப்பதாக இல்லை. சீனாவும் அதனை விரும்பாது.

இந்த அரசியல் பின்னணியில், பரஸ்பர மரியாதை, அமைதியான சகவாழ்வு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் புதிய அரசியல் சகாப்தத்தில் ஒருவருக்கொருவர் பழகுவதற்கான சரியான வழியைக் கண்டறிய அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கூறியிருக்கிறார். அமெரிக்க - சீனா உறவுகளுக்கான தேசியக் குழுவின் 'காலா விருந்து'க்கு (Annual gala dinner) அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே ஜி ஜின்பிங் இவ்வாறு கூறியதாக ஹின்குகா ((Xinhua) செய்தி நிறுவனம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளது. முரண்பாடுகளில் உடன்பாடாக இவ்வாறான விருது வழங்கும் நிகழ்வுகள் இரு நாடுகளினதும் அரசியல் சமநிலைக்கு இடம்கொடுக்காது விட்டாலும், நேரடி மோதலைத் தவிர்ப்பதற்கான உத்தியாகக் கருத முடியும். பொருளாதார ரீதியான சர்வதேச வர்த்தக நகர்வுகளுக்கு அமெரிக்க - சீன உறவின் முக்கியத்துவத்தை இரு நாடுகளும் புரிந்துகொள்ளாமல் இல்லை. ஆனால் உலக அரசியலில் அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில், அமெரிக்க - சீனப் பலப்பரீட்சை ரஷ்ய - உக்ரைன் போரில் பரீட்சிக்கப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

சீனா மீது அமெரிக்காவுக்கும், அமெரிக்கா மீது சீனாவுக்கும் இருக்கும் அச்சம் ஒன்றுக்கொன்று அழுத்தத்தை அதிகரிக்க வழிவகுத்துள்ள சூழலில், இருதரப்பு உறவுகளில் பரஸ்பர மரியாதை, அமைதியான சகவாழ்வு ஆகியவற்றில் உறுதியாக இருப்பதாக சீனா உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்ற கருத்தையே ஜி ஜின்பிங் தனது வாழ்த்துச் செய்தியில் முன்வைத்திருக்கிறார். சீனாவின் குளோபல் ரைம்ஸ் இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

அதாவது தற்போதைய உலக ஒழுங்கை மாற்றி அமைக்க முற்படும் சீனா, உலக ஒழுங்கின் பங்கேற்பாளராகவும் அமைதியின் பாதுகாவலராகவும் இருப்பது போன்ற தோற்றப்பாட்டைக் காண்பிக்க முற்படுகிறது. அதுவும் உக்ரைன் போர், தாய்வான் நீரிணைப் பதற்றம் என்பவற்றின் மத்தியில் சீனா தன்னை அமைதியின் காவலனாகக் காண்பிக்கவே எத்தனிக்கிறது

குறிப்பாக உலகம் இன்று அமைதியாக இல்லை என்று குறிப்பிட்ட ஜி ஜின்பிங், ஸ்திரத்தன்மை, அமைதி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தவும் சீனா ஒத்துழைக்கும் என்றும் அந்த வாழ்த்துச் செய்தியில் கூறியிருக்கிறார். அதாவது அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்றத் தயார் என்ற செய்தி இதன் மூலம் வெளிப்படுகின்றது.

ஆனால் 'சீன இன்ஸ்ரிரியுட் ஓஃப் இன்டர் நஷனல்' கற்கையின் மூத்த ஆராய்ச்சியாளர் யாங் சியு, தற்போதைய சீனா அமெரிக்க உறவுகள் கடினமான காலகட்டத்தில் இருப்பதாகக் கூறுகிறார். சீனா மீது அமெரிக்கா மேம்பட்ட அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். சீனாவின் குளோபல் ரைம்ஸ் செய்தி நிறுவனத்துக்கு இந்தக் கருத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் தாய்வான் நிலைமையை 'இனி ஏற்றுக் கொள்ள முடியாதது' என்று சீனா முடிவு செய்துள்ளதாகவும், 'பலத்தை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உட்பட தீவின் மீது அழுத்தத்தை சீனா அதிகரிக்கத் தொடங்கியுள்ளது' என்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் அன்ரனி பிளிங்கன் புதன்கிழமை வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.



அதேவேளை, தாய்வான் பிரச்சினையில் நெருப்புடன் விளையாடுவதை நிறுத்துமாறு சீனாவின் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் டான் கெஃபே, அமெரிக்காவை எச்சரித்துள்ளார். இதேவேளை, கடுமையான போட்டியை எதிர்நோக்கியிருப்பதாகவும், ஆனால் அது மோதல் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியதாக வொஷிங்டன் ரைம்ஸ் கூறியுள்ளது. 'அமெரிக்காவின் மிகவும் பின்விளைவுப் புவிசார் அரசியல் சவால்' என்று அடையாளம் காட்டும் ஜோ பைடனின் பாதுகாப்பு உத்தி, சீனா மீதான அதீத கவனத்தை வெளிப்படுத்துகின்றது. ஆனால் தற்போதைய அமெரிக்கக் கொள்கைகள் மற்றும் சீனா மீதான விரோதப் போக்குகள் அனைத்தும் உண்மையில் சீனா விரைவில் பெரியதாகவும் வலுவாகவும் மாறும் என்ற அச்சத்தாலேயே உந்துதல் பெற்றுள்ளதாகச் சீனாவின் குளோபல் ரைம்ஸ் செய்தி நிறுவனம் குற்றம் சுமத்தியுள்ளது. ரஷ்ய - உக்ரைன் போர் மற்றும் தாய்வான் விவகாரம் ஆகியவற்றோடு அமெரிக்கா எடுத்துள்ள கடும் நடவடிக்கைகள் அமெரிக்காவின் உள்ளக அரசியல் பொருளாதாரச் செயற்பாடுகளில் பாதிப்புகளை உருவாக்கியுள்ளதாகவும் குளோபல் ரைம்ஸ் செய்தி நிறுவனம் விமர்சித்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க - சீன உறவு தொடர்பாக சீன ஜனாபதி கூறிய கருத்துக்கள் அமெரிக்காவால் எந்தளவு தூரம் ஏற்கக்கூடியதாக இருக்கும் என்பது கேள்வியே. தாய்வான் மீதான சீன ஆக்கிரமிப்பு, மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கடற்பயணம் உள்ளிட்ட பொருளாதாரம், பாதுகாப்பு ஆகியவற்றுக்கு ஆபத்து என்ற கோணத்திலேயே அமெரிக்கா கருதுகின்றது.

அத்துடன் உக்ரைன் போரில் ரஷ்யாவுக்குச் சீனா வழங்கும் ஆதரவும் உலக அரசியல் ஒழுங்கில் சீனச் சார்பு அதிகார மையத்தைத் தோற்றுவிக்கும் என்ற அச்சமும் அமெரிக்காவுக்கு உண்டு. அமெரிக்காவின் இவ்வாறான அச்ச உணர்வு சீன மற்றும் ரஷ்ய ஆதரவு நாடுகளைத் தவிர ஏனைய அனைத்து நாடுகளிடமும் உண்டு. இலங்கை போன்ற சிறிய நாடுகள், சீனாவிடம் உதவியைப் பெற்றாலும் அமெரிக்க இந்திய அரசுகளின் தேவை கருதியும் செயற்படுகின்றன. ஆனால், சீனாவின் வளர்ச்சியால் ஏற்படவுள்ள பாதிப்புகள் பற்றி இலங்கை அலட்டிக்கொள்வதில்லை. அத்தோடு சீனாவும் இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்குக் கடன்களை அள்ளிக் கொடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதைப்பொருளைத் தடுக்க ஒரு படைப்பிரிவு?

○ நிலாந்தன்

வடக்கில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கஞ்சா தொகையாகக் கைப்பற்றப்பட்டது. இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணப் பகுதிக்கு மிகவும் பிரமாண்டமான முறையில் போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இளம்சந்ததியினரும் அவற்றுக்கு அடிமையாகின்ற தன்மையானது வெகுவாக அதிகரித்துள்ளது. அந்த வகையில் இந்த துர்ப்பாக்கிய நிலையினை இல்லாதொழிப்பதனை நோக்கமாகக் கொண்டு யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேயசுந்தரவினுடைய தலைமையில் விசேட படைப் பிரிவானது உருவாக்கப்பட்டு விசேட சோதனை நடவடிக்கைகள் மற்றும் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அதனூடாக யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல்களை தடுத்தல், கைதுசெய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதனுடன் தெடர்புள்ள நபர்களை நீதிமன்றில் முன்நிறுத்துதல் போன்ற செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" இது பலாலி படைத் தலை மையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பின் ஒருபகுதி.

அதாவது முடிவில் படைத்தரப்பும் போதைப் பொருளுக்கு எதிராக களத்தில் இறங்கிவிட்டது என்று பொருள். தமிழ்மக்கள் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் படைத்தரப்பு அவ்வாறு இறங்கும். ஏற்கனவே அவர்கள் சந்திகளில் நிற்கிறார்கள். ஏற்கனவே எஸ்.ரி.எப் களத்தில் இறங்கிவிட்டது. சிலநாட்களுக்கு முன் எஸ்.ரி.எப் வவுனியாவில் தானும் களமிறங்கப்போவதாக அறிவித்திருக்கிறது. படைத்தரப்பு இயற்கை அனர்த்தங்களின் போதும் பெருந்தொற்று நோயின் போதும் களத்தில் இறங்கியது. இலங்கைத் தீவில் மேலிருந்து கீழ்நோக்கிய மிகப் பலமான நிறுவனக் கட்டமைப்பை படைத்தரப்பு கொண்டிருக்கிறது. இலங்கை நாட்டில் அதிக ஆளணியையும் அதிக வளங்களையும் கொண்ட அரச இயந்திரம் அதுதான். எனவே இது போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் அவர்களை ஈடுபடுத்தும்.

ஆனால் இங்குள்ள பிரச்சினை என்னவென்றால், தீவின் மொத்த படைக்கட்டமைப்பில் மூன்றில் இரண்டு பகுதி தமிழ்ப் பகுதிகளில் நிலை கொண்டிருப்பதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. தமிழ்க் கடல் பெருமளவுக்கு ஸ்ரீலங்கா கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. நாட்டின் படைக் கட்டமைப்பின் மூன்றில் இரண்டு பகுதி நிறுத்தப்பட்டிருக்கும் தமிழ்ப் பகுதிக்குள் அதிகளவு போதைப்பொருள் நுகரப்படுகிறது என்றால் அதற்கு அந்தப்பகுதியை கட்டுப்படுத்தும் படைத்தரப்பும் பதில் கூறவேண்டும் என்று தமிழ் அரசியல்வாதிகள் கேட்கிறார்கள்.

அண்மையில் இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்து தெரிவித்திருந்தார். மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் பின்வருமாறு கூறியுள்ளார்..."இதனை சட்டரீதியாக தடுக்க வேண்டியவர்களே அதற்கு உடந்தையாக இருப்பது தெரிகிறது. அது சம்பந்தமாக மிக உயர்ந்த மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்". அதாவது போதைப் பொருள் வலைப் பின்னலுக்கும் குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கும் படைத்தரப்பு அல்லது பொலிஸின் மீது அவர் மறைமுகமாக குற்றம் சாட்டுகிறார். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் தான் படைத்தரப்பு போதைப்பொருளுக்கு எதிராக களமிறங்கியிருக்கிறது.

அவர்கள் களமிறங்குவதற்கு முன்னரே கடந்த சில வாரங்களாக தமிழ்ப் பகுதிகளில் பொலிஸும் அதிரடிப் படையும் ஆங்காங்கே போதைப் பொருள் வலைப் பின்னலுக்கு எதிராக முன்னெடுத்துவரும் முறியடிப்பு நடவடிக்கைகள் தொடர்பான செய்திகள் ஒப்பீட்டளவில் அதிகரித்த அளவில் வெளிவருகின்றன. குறிப்பாக போதைப்பொருள் பாவனையாளர்களை, விநியோகஸ்தர்களைக் கைது செய்வது தொடர்பான செய்திகள் அடிக்கடி வெளிவருகின்றன. கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களோடு பொலிஸார் காட்சியளிக்கும் படங்களும் ஊடகங்களில் பிரசுரிக்கப்படுகின்றன. இந்தச்செய்திகளை தொகுத்துப்பார்த்தால் போதைப்பொருளுக்கு எதிரான முறியடிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதான ஒரு தோற்றம் நமக்கு கிடைக்கும்.

ஆனால் அரசின் சட்டம் ஒழுங்கைப் பேணும் அமைப்புகளால் மட்டும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு விடயம் இதுவல்ல என்பதனை நான் ஏற்கனவே பல தடவை எனது கட்டுரைகளில் சுட்டிக்காட்டியுள்ளேன். தமிழ்மக்களின் தேசிய இருப்பை சிதைக்கும் உள்நோக்கத்தோடு போதைப்பொருள் விநியோகம் திட்டமிட்டு ஊக்குவிக்கப்படுவதாக ஒரு சந்தேகம் பரவலாக உண்டு. சுமந்திரனும் சிறீதரனும் கூறுவதுபோல அது மேலிருந்து கீழ்நோக்கிய ஒரு திட்டமிட்ட செயலாக இருக்கக்கூடும். ஆனால் அதை எதிர்கொள்வதற்கு கீழிருந்து மேல் நோக்கிய ஒரு கட்டமைப்பை, சுய கவசங்களை தமிழ்மக்கள் கட்டியெழுப்ப வேண்டும். இதுதொடர்பில் கீழிருந்து மேல் நோக்கிய விழிப்பைக் கட்டியெழுப்ப வேண்டும். எனது நண்பர் ஒருவர் கூறுவதுபோல தமிழ்ப் பகுதிகளில் கிராம மட்டத்தில் படைப்புலனாய்வுத்துறை வைத்திருப்பது போன்ற வினைத்திறன் மிக்க மேலிருந்து கீழ்நோக்கிய வலைப் பின்னல் நமது கட்சிகளிடமே கிடையாது.

தமிழ் இளையோர் மத்தியில் குறிப்பாக பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பதற்கு தனியே மேலிருந்து கீழ்நோக்கிய கட்டமைப்பை மட்டும் குறை சொல்லிக் கொண்டிருக்க முடியாது. மாறாக கீழிருந்து மேல் நோக்கிய சுயகவசங்களை தமிழ் மக்கள் கட்டி எழுப்ப வேண்டும். அதைத் தனியே மருத்துவர்களால் மட்டும் செய்யமுடியாது என்பதனைத் தான் அண்மை காலங்களில் கிடைக்கும் புள்ளி விவரங்கள் நமக்குக் காட்டுகின்றன. மருத்துவர்கள் இதில் ஒரு பகுதிதான். மருத்துவ சிகிச்சைக்கும் அப்பால் ஒரு கூட்டுச்சிகிச்சை தேவைப்படுகிறது. அதைத் தனியே மருத்துவர்கள் மட்டும் செய்யமுடியாது. இளைய தலைமுறைக்கு தலைமை தாங்க இலட்சியப் பாங்கான தலைவர்கள் வேண்டும்.

இளைய தலைமுறையை இலட்சியத்தை நோக்கிச் செலுத்தப்பட்ட அம்புகளாக மாற்றினால் இது போன்ற துஷ்பிரயோகங்களுக்கு இடமிருக்காது. அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், அறிவுஜீவிகள், சமயப் பெரியோர், கல்விச்சமூகம், படைப்பாளிகள், ஊடகங்கள் என்று எல்லாத்தளங்களிலும் இருக்கக்கூடிய செயற்பாட்டாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அதை ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும். அந்தக்கூட்டுச் செயற்பாட்டுக்கு அரசியல்வாதிகளோ அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களோ தலைமை தாங்க வேண்டும். ஆனால் அவ்வாறு தலைமை தாங்கும் தகுதியோ தரிசனமோ பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகளுக்கு இல்லை, பலமான குடிமக்கள் சமூகமும் இல்லை என்ற வெற்றிடத்தில்தான் போதைப் பொருள் பாவனை அதிகரிக்கிறது.

இதை ஒரு குற்றச்செயலாக மட்டும் கருதி அதற்குரிய முறியடிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. மாறாக இதை ஒரு கூட்டுநோயாக, ஒரு பண்பாட்டு வெற்றிடமாக, ஒரு அரசியல் தலைமைத்துவ வெற்றிடமாக, உள்ளூர் தலைமைத்துவ வெற்றிடமாக, ஆன்மிக வறட்சியாக, இன்னபிறவாக தொகுத்துப் பார்க்கவேண்டும். இதில் தனியே மேலிருந்து கீழ் நோக்கிய கட்டமைப்பை மட்டும் குறை சொல்லிக் கொண்டிருக்காமல் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு மத நிறுவனமும் ஒவ்வொரு பாடசாலையும் தங்களுக்குள்ள கூட்டுப் பொறுப்பை உணரவேண்டும். வீட்டில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே இறுக்கமான பாசப்பிணைப்பு இருந்திருந்தால் இடையில் ஒரு போதைப்பொருள் வியாபாரி நுழைந்திருக்க முடியாது. பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் உள்ளூர் தலைவர்களுக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் சமயப் பெரியாருக்கும் இடையே இடைவெளி அதிகரிக்கும் பொழுது இதுபோன்ற துஷ்பிர யோகங்களும் அதிகரிக்கும். அந்த இடைவெளி எங்கிருந்து வந்தது? என்று கண்டுபிடிக்க வேண்டும். போட்டிக்கல்வி முறைமையானது பாடசாலைகளின் மதிப்பைக் குறைத்துவிட்டது. இதனால் பாடசாலை ஆசிரியர்கள் பிள்ளைகளின்மீது செல்வாக்குச் செலுத்துவதில் வரையறைகள் அதிகரிக்கின்றன.

அண்மையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாணப் பிரிவும், யாழ் போதனா மருத்துவமனையின் சம்பந்தப்பட்ட பிரிவும் இணைந்து இது தொடர்பான அறிவுறுத்தல்களை வெளியிட்டிருந்தன. ஒரு பள்ளிக்கூடப் பிள்ளை போதைப்பொருள் பாவனையாளராக இருந்தால் அதை கண்டுபிடிப்பதற்கு வேண்டிய அறிகுறிகளை அவர்கள் விவரமாகத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் பிரச்சினை என்னவென்றால், ஒரு பிள்ளையிடம் அவ்வாறான மாற்றங்கள் ஏற்படுவதனை யார் கவனிப்பது?. அதைப் பெற்றோரும் ஆசிரியர்களும் தான் கவனிக்க வேண்டும். வீட்டில் உள்ள மூத்த தலைமுறைதான் அதைச் செய்ய வேண்டும். ஆனால் இன்றைக்கு மூத்ததலைமுறையின் கவனத்தைக் கலைப்பதற்கு பல விடயங்கள் வந்துவிட்டன. குறிப்பாக திரைத் தொடர்கள், கைபேசிச் செயலிகள் போன்றவற்றை கூறலாம். ஒரு முதிய தலைமுறை திரைத்தொடர்களின் கைதியாகிவிட்டது.

நடுத்தர வயதுக்காரர்கள் கைபேசிகளின் கைதிகளாகி விட்டார்கள். இது பொழுதுபோக்குகளின் காலம். மூத்த தலைமுறை பொழுதுபோக்குச் சாதனங்களில் மூழ்கிக் கிடக்கும் பொழுது, இளைய தலைமுறை எங்கே போகிறது ? என்ன செய்கிறது? யாருடன் தொடர்பை வைத்திருக்கின்றது? போன்றவற்றை கவனிப்பதற்கான நேரங்கள் குறைகின்றன. இவ்வாறான தொடர்ச்சியான அவதானிப்பும் கவனிப்பும் இல்லாத வெற்றிடத்தில்தான் போதைப்பொருள் நுழைகிறது, வாள்களும் நுழைகின்றன.


யாழ். போதனா மருத்துவமனை வெளியிட்டிருக்கும் அந்தப் பிரசுரத்தில் காணப்படும் குணங்குறிகளை தொடர்ச்சியாகக் கவனிப்பது என்று சொன்னால் பெற்றோரும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவையும் தொடர்ச்சியாகக் கவனிக்க வேண்டும். அதாவது பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் ஆசிரியருக்கும் இடையே அதிகபட்ச தொடர்பாடல் இருக்க வேண்டும். எனவே போதைப் பொருட்களுக்கு எதிரான சுயகவசங்களை இங்கிருந்துதான் கட்டியெழுப்பத் தொடங்க வேண்டும்.

தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசம் என்று கூறுகிறார்கள். ஒரு தேசியஇனம் என்ற அடிப்படையில் தமக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு சமூகமாக, பலமான ஒரு திரட்சியாக இல்லை என்பதனை அண்மையில் எரிபொருள் வரிசைகளில் கண்டோம். இப்பொழுது அவர்கள் குடும்பமாகக்கூட இல்லையா என்று கேட்க வேண்டிய ஒரு நிலைமையை போதைப்பொருள் பாவனை ஏற்படுத்தியிருக்கிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர்கள் திருந்தி விட்டார்களா?

ந.பரமேஸ்வரன்



தேசியப்பிரச்சினைக்குத்தீர்வு காண தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டுமென ஜனாதிபதி ரணிலும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் தெரிவித்துள்ளனர். அத்துடன் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேசப்போவதாகவும் இருவரும் கூறியுள்ளனர். உண்மையிலேயே இவர்களுக்கு இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற அக்கறை இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசினால் போதும். தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தான் ஆகக்குறைந்த கோரிக்கையை (ஒருமித்த அல்லது ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு) என்ற விடயத்தை வலியுறுத்தி வருகிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 'ஒரு நாடு இரு தேசம்' என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதற்கு எது வித தடையுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டாமென்றோ பேசக்கூடாது என்றோ எவரும் தடை விதிக்கவில்லை.

சிங்களப் பேரினவாதிகளின் எதிர்ப்பை மீறி ரணிலால் தமிழர்களுக்கு ஒரு நியாயமான ,கௌரவமான தீர்வை வழங்க முடியுமா ? என்பதே இப்போது உள்ள பிரச்சனை.

சிங்களவர்களைப் பொறுத்த வரையில் சிங்களவர்களின் பசியைப் போக்குவதற்கு அனைவரும் உதவி செய்ய வேண்டும். தமிழக உறவுகள் புலம்பெயர்ந்த சகோதரர்கள் உட்பட. தமிழக உறவுகள்(பிச்சைக்காரர்கள் உட்பட). புலம்பெயர்ந்த சகோதரர்கள் அனைவரும் வழங்கிய பிச்சையை சிங்களவர்கள் தமக்குள் பங்கிட்டுக் கொண்டு தமிழர்களை தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருப்பார்கள் . அதைப்பற்றி ஐ.நா. உட்பட எவருமே வாய் திறக்கக் கூடாது.இது தான் சிறீலங்காவின் சிங்கள ஜனநாயகம்.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் உதயகம்மன்பில தமது கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் மகாநாட்டில் 'புலம்பெயர் தமிழர்களின் பணம் வந்தால் பரவாயில்லை. ஆனால் பிரிவினைவாதம் வரக்கூடாது' எனக் கூறியுள்ளார்.

ஐ.நா.வுக்கான நிரந்தர இந்தியப்பிரதிநிதி இந்திரா மணி பாண்டே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் ஒரு முக்கியமான உரையை நிகழ்த்தியிருந்தார்.

'சிறீலங்காவில் அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான நீடித்த பயனுள்ள தீர்வைக்கண்டறிவதை இந்தியா எப்போதும் கொள்கையாகக் கொண்டுள்ளது. இலங்கையில் சமத்துவம் ,நீதி. கண்ணியம் மற்றும் ஒருமைப்பாடு இறையாண்மைக்கான அடிப்படையில் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நனவாக்குமாறு இந்தியா வேண்டுகிறது' இது தான் மணி பாண்டே ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சொன்ன விடயம். மணி பாண்டேயின் உரைக்கு சிங்கள இனத்தைச் சேர்ந்த ஆங்கிலப் பத்தி எழுத்தாளரான மலிந்த செனிவிரத்ன என்பவர் எதிர்வினையாற்றி எழுதிய பத்தி சிங்களப் பேரினவாதத்தின் உண்மை முகத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

'இந்தியா ஒரு விசித்திரமான நகைப்புக்குரிய நாடு . அதேபோல இந்திரா மணி பாண்டேயும் ஒரு விசித்திர நகைப்புக்குரிய நபர்தான். ராஜீவ் காந்தி இலங்கையை பூட்டானாக மாற்ற முயற்சித்தார். .இந்திரா மணி பாண்டே முதலில் சர்வதேச தெற்காசிய விவகாரங்களைப் படிக்க வேண்டும். எதற்காக இந்தியா ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் நடந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை? உண்மையில் இந்தியா இலங்கைக்கு எதிராகவே செயற்படுகிறது.

வடமாகாணசபை தனக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு சதத்தை கூட செலவழிக்கவில்லை. ஈழவரைபடத்தை சட்டபூர்வமாக்குவதும் காணிகளை அபகரிப்பதுமே இவர்களின் நோக்கம். அதற்காகவே மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு கேட்கின்றனர்.

இந்தியா எதற்காக பயங்கரவாதிகளுக்கு பயிற்சி அளித்தது? இலங்கை - இந்திய ஒப்பந்தம் துபபாக்கி முனையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தம். ஒப்பந்தத்தில் சொன்ன படி இந்தியாவால் பயங்கரவாதிகளிடமிருந்து ஆயுதங்களை களைய முடியவில்லை.

பயங்கரவாதிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு இலங்கை 22 ஆண்டுகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியிருந்தது. எனவே இந்தியா வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும். அதிகாரப்பகிர்வு என்றால் வடக்கு- கிழக்கு தமிழர்களில் 50 வீதமானவர்கள் வடக்குகிழக்குக்கு வெளியே தான் வசிக்கின்றனர். இலங்கையின் மொத்த சனத்தொகையில் 5 சதவீத மக்களுக்கு 2/3 கடல் 1/2நிலம் கொடுக்க வேண்டுமா?.

இந்தியாவில் குஜராத், மகராஷ்டிரா, ராஜஸ்தான்,உத்தரப்பிரதேசம்,மத்திய பிரதேசம் போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு ஏன் சம உரிமை வழங்கக்கூடாது?

இறுதியாக,இந்தியா புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்கப்பணிகளுக்கு உதவியளித்து வருவதுடன் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் உதவியளித்துள்ளது, நன்றி. ' இப்படியான விஷத்தைதான் அந்தப் பத்தி எழுத்தாளர் கக்கியுள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வாரம் தோறும் அரசியல் விவகாரங்களை அலசி ஆராயும் பத்தி எழுத்தாளர் ஒருவரே இப்படி விஷத்தை கக்குகிறார் என்றால் அரகலய போராட்டத்தைப்பார்த்து சிங்களவர்கள் திருந்தி விட்டார்கள் என்ற கூற்றை எப்படி ஏற்றுக்கொள்வது?

# அறிந்தும் அறியாமலும்

சுழியன்

## சுக்குப் பக்கு... கட்சிச் சுற்றுலா!



2023ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியே பாதீட்டை முன்வைத்து உரையாற்றுவார். பின்னர் 15 ஆம் திகதி முதல் பாதீடு மீதான விவாதம் ஆரம்பமாகும். டிசெம்பர் 8 ஆம் திகதி இறுதி வாக்கெடுப்பை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 14 ஆம் திகதி முதல் ஞாயிறு மற்றும் போயா தினங்களைத் தவிர ஏனைய நாட்களில் சபை தொடர்ச்சியாகக் கூடும்.

நாடாளுமன்றத்தில் பாதீடு நிறைவேறிய பின்னர், நாடாளுமன்றத்துக்கு ஒரு மாதகால விடுமுறை வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் விடுமுறை காலங்களில் அரசியல் பிரமுகர்கள் குடும்ப சகிதம் வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்வார்கள். மேலும் சிலர் உள்நாட்டில் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களுக்கும் போவார்கள். இம்முறையும் சுற்றுலா வுக்கான ஏற்பாடுகளில் எம்.பி.க்கள் இப்போதே இறங்கிவிட்டார்களாம்.

இந்நிலையில் டலஸ் அழகப்பெரும தலைமையிலான 'சுதந்திர மக்கள் சபை'யினர் பதுளைக்கு சுற்றுலா மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.ரயில் மூலமே இந்தப்பயணத்தை மேற்கொள்ள திட்டமிட்டுள்ள அவர்கள், சுற்றுலாவுக்கு சமாந்தரமாக கட்சிப் பணிகளையும் மேற்கொள்ள உத்தேசித்துள்ளனர்.

பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ரயில் பயணங்களை மேற்கொள்வாரா என தெரியாது, எனினும், அவரையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என உறுப்பினர்கள் சிலர் டலஸிடம் கோரிக்கை விடுத்துள்ளனராம்.

## அழகிப் போட்டியில் அடிதடி



அமெரிக்காவின், நியூயோர்க் டெட்டன்ஸ் நகரில் அண்மையில் நடத்தப்பட்ட 'த மிஸ் ஸ்ரீலங்கன் நியூயோர்க்' அழகிப் போட்டியின்போது இரு குழுக்களுக்கிடையில் சினிமா பாணியில் தூள் பறக்க அடிதடி ஏற்பட்டது. இது தொடர்பான காணொலி சமூகவலைத் தளங்களில் வைரலாகியது.

இந்தப்போட்டிக்கான நடுவர்கள் சிலர் இலங்கையில் இருந்தே சென்றுள்ளனர். அமெரிக்காவில் வாழும் சுமார் 14 வரையான அழகிகள் போட்டியில் பங்கேற்றுள்ளனர். மேற்படி மோதல் சம்பவம் தொடர்பில் பலகோணங்களில் கதைகள் அடிபடுகின்றன. இது தொடர்பில் நாம் சுழியோடி பார்த்தோம். உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. போட்டி நடைபெற்ற மண்டபத்தில் அல்ல. போட்டி முடிவடைந்த பிறகு விருது வழங்கும் மண்டபத்தில் வைத்தே இரவு வேளையில் இம்மோதல் ஏற்பட்டுள்ளது. 'காதல்' விவகாரமே இதற்குக் காரணம் என்பதே 'லேட்டஸ்ட்' தகவல். 'த மிஸ் ஸ்ரீலங்கன் நியூயோர்க்' போட்டியில் பங்கேற்ற அழகி ஒருவரின் முன்னாள் மற்றும் இந்நாள் காதலர்களும், அவர்களின் சகாக்களுமே இவ்வாறு அடிதடியில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னாள் காதலன், அமெரிக்காவின் குயின்ஸ் நகரில் இருந்து சுமார் 150 பேருடன் வந்துள்ளார். இந்நாள் காதலனும் ஆட்களை கூட்டிவந்துள்ளார். மண்டபத்துக்குள் வைத்து முரண்பட்டாலும், பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களை வெளியேற்றும்போது, கைகலப்பு ஏற்பட்டு, மண்டபத்தின் வெளியில் அது பெரும் மோதலாக மாறியதாம். இந்தச்சம்பவமானது அப்பகுதியில் வசிக்கும் இலங்கையர்களுக்கு பெரும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.



## குடும்பத்துக்குள் குழப்பம்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையே இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாம்.

பாதுகாப்பு தரப்பினர்களுக்கான இடமாற்றம் உட்பட முக்கியமான சில விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. அதேவேளை, அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்டமூலம் நிறைவேறுவதற்கு முன்னர் ராஜபக்ச குடும்பத்தின் கூட்டமொன்றும் இடம்பெற்றுள்ளது. இதன்போது 22 க்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என சமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார். அதற்கு அனைவரும் உடன்பட்டுள்ளனர்.

ராஜபக்ச குடும்பத்தில் சமல் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, சசீந்திர ராஜபக்ச ஆகியோர் 22 க்கு ஆதரவாக வாக்களித்தனர். மஹிந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. நிபுண ரணவக்க வெளிநாடு சென்றிருந்தார். இதனால் ராஜபக்ச குடும்பம் 22 ஆவது திருத்தத்தோடு இரண்டாகிவிட்டதாக அரசல் புரசலாக கதைகள் அடிபடவே செய்கின்றன.

## கூட்டத்தைக் குழப்பினால் கொலை!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் புத்தளம், ஆனமடுவ தொகுதிக் கூட்டம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் ஆராச்சிக்கட்டுவயில் ஒக்டோபர் 27 ஆம் திகதி நடைபெற்றது. நாவலப்பிட்டியவில் நடைபெற்ற மொட்டுக்கட்சியின் 2 ஆவது தொகுதிக் கூட்டத்தின்போது, மஹிந்த ராஜபக்சவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளரால் போராட்டமொன்றும் நடத்தப்பட்டது. எனவே, புத்தளத்திலும் அவ்வாறு நடக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், " எங்களின் கூட்டத்தை குழப்பினால் கொலை விழும்" என மொட்டுக் கட்சி எம்.பியான சனத் நிஷாந்த, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு நேரில் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அந்த எச்சரிக்கையாலோ என்னவோ , ஆனமடுவ தொகுதிக் கூட்டத்துக்கு எதிராக புத்தளத்தில் சிறு எதிர்ப்புக்கூட கிளம்பவில்லையாம். சிலவேளை எதாவது அசம்பாவிதம் நடந்தால் பதிலடி கொடுக்க சனத் நிஷாந்தவின் அடியாட்கள் தயாராகவே இருந்துள்ளனர்.


கூட்டத்தில் பங்கேற்பவர்களை கலாய்ப்பதற்காக எவராவது, வீதியில் புல் வைத்தால், அவர்களுக்கு புண்ணாக்கு ஊட்டுவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்ததாக தகவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்




**சு.மாதுளன்,**
தரம்: 1
யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்.



**ஜெ.எல்.நிஷாரா,**
தரம்: 6
யா/ ஏஞ்சல் இன்ரர்நெஷனல் பாடசாலை.




**சு.கெயில் தெயோ**
தரம் 6E
யா/புனித பத்திரிசியார் கல்லூரி



**உ.அக்சனா**
தரம் - 07c
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை




**பி. சஞ்ஜேய்**
தரம் -3
யா /கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை



**சு.விதுஷ்னா**
தரம் - 2C
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

## பேனைகளின் தியாகம்

பள்ளி செல்லும் காலத்து நண்பனே
அள்ளி அள்ளி மை இறைக்கும் ஆருயிர் நண்பனே
சொல்லிய சொற்களை ஆவணமாக்கும் நண்பனே
நீ உயிர்விடும்போது கிடைப்பது இன்பமே ஏன்?

சொல் நண்பனே உன் கஷ்டத்தை மனிதருக்கு
வாய்மூடிய அடக்கம் தேவையில்லை நண்பனே
உன் உயிரை மையமாகத் தந்து உயிர் துறக்கிறாய்
உன்பிறப்பில் இன்பங்காணும் மக்களை மதிக்கிறாய்

**வ.இமாஜன்.**
தரம்11
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

மாணவர்களே...

உங்கள் ஆக்கங்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

077 316 5555

என்ற எண்ணுக்கோ அல்லது
sanjeeviuthayan@gmail.com
361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கோ அனுப்பலாம்

# சொற்சிலம்பம் போட்டி

107

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| ■ | 10 | 11 | | ■ | 12 | | |
| 13 | | | ■ | 14 | | ■ | |
| 15 | | | 16 | | ■ | 17 | |
| | ■ | 18 | | ■ | 19 | | ■ |
| ■ | 20 | ■ | 21 | | | | 22 |
| 23 | | | | ■ | 24 | | |

அனுப்புபவர் பெயர்:..........................................
முழுமையான தபால் விலாசம்: ..................................
..........................................................
கையொப்பம்:..................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. வசிட்டன் மனைவி 5. பிரி 7. படி 8. வரும்படி 10. கத்தி அழு 12. இளைய சகோதரன் 13. நீர்த்தன்மை 14. தும்பில் இருப்பது 15. நிகழ்வு 17. கட்டம் கட்டத் தேவை 18. உள்ளே வேகவை 21. அதிக வடிவு 23. மேடு அல்ல 24. மாத்திரை

### மேலிருந்து கீழ்

1. எல்லையற்ற ஆசை 2. சுவை நிரம்பியது 3. பிழை 4. செல்வம் 5. காடு 6. வணங்கல் 9. பெண்கள் 11. கணவன்- மனைவி 13. மழைக்காலத்தில் வருவது 14. தன்மைப் பன்மை 16. வர்த்தகம் 17. அகம்புறமாதல் 19. இதுவும் காடுதான் 20. பன்மைக்கு வரும் 22. காய்கள்/ பழங்களின் கொத்து

### சொற்சிலம்பம் போட்டி 106 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சாசுவதம் 5. கதி 7. கத்திரி 8. கருணை 9. சதி 10. சபலம் 12. கனல் 13. புசி 15. வாரம் 16. தலித் 17. மானம் 18. கலை 19. தர 20. நானாவிதம் 22. விம்பம் 23.திசை

**மேலிருந்து கீழ்**

1. சாகசம் 2. சுத்தி 3. வதி 4. தரிசனம் 5. கரும்பு 6. திணை 8. கல 11. பல் 12. கரம் 14. சித்தம் 15. வானரம் 16. தலைவிதி 17. மாதவி 18. கனா 20.நாம 21.தசை

**சொற்சிலம்பம் போட்டி இல.107**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**04.11.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 106 இல் வெற்றி பெற்றோர் விவரம்

**1 ஆம் பரிசு**
**பி.மரியதாஸ்**
பூண்டிமாதா வீதி, எமில்நகர், மன்னார்.


**2 ஆம் பரிசு**
**ஐ.முருகையா**
மடத்தடி, பலாலி வீதி, உரும்பிராய்.

**3 ஆம் பரிசு**
**க.தில்லையம்பலம்,**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**4 ஆம் பரிசு**
**சி.தியாகேஸ்வரி,**
பச்சு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**5 ஆம் பரிசு**
**சி.பிரணவி,**
187, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**21.10.2022 இல் காலமான ஈழத்தின் மூத்த எழுத்தாளர் சாகித்யரத்னா தெளிவத்தை ஜோசப்புக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது ‘அம்மா’ என்ற சிறுகதை இங்கு மீள்பிரசுரமாகின்றது.**

# அம்மா

○ தெளிவத்தை ஜோசப்

*(கடந்த வாரத்தொடர்ச்சி)*

மனைவியையும் மகளையும் கூட்டிக் கொண்டு அவனும் தோட்டத்துக்குள் செல்வான். தம்பியின் சின்னது இரண்டும் அக்காவின் கைகளை பிடித்துக்கொண்டு உடன் நடக்கும்.

அம்மாவின் மடியில் அவனும் அவன் மடியில் அம்மாவுமாய் ஆனந்தமாக அந்தக் கொஞ்ச நேரப் பொழுதைப் போக்கி விடுவான் அவன். ஆனால் மனைவியும் மகளும் எத்தனை நேரம் அதற்குள்ளேயே அமர்ந்திருப் பார்கள்?

லயத்துக்கும் காய்கறி தோட்டத்துக்கும் நடுவில் இருக்கும் வேலி யிடம் நிற்கிறது ஒரு மாதுளை மரம். சின்னவனுக்கும் அதற்கும் ஒரு வயசு என்று இறக்கும்முன் அப்பா அடிக்கடி கூறுவதுண்டு.

கிளை நுனிகளில் சிவப்புச் சிவப்பாய் சின்னச் சின்னப் பூக்களும் குண்டு குண்டாய்க் காய்களு மாய்.....

ஒரு காயைத் தொட்டுப் பார்க்கின்றாள் மகள். தனது மொட்டுக்கள் விரிய "மாதுளை" என்பாள் தகப்பனைப் பார்த்து.

"புடுங்கி திண்ணும்மா, குடற் பூச்சிக்கும் நெஞ்சுச் சளிக்கும் நல்லது" என்று உள்ளிருந்து ஓடி வரு கிறது அம்மாவின் குரல்.

தங்களைச் சுற்றிச் சுற்றியே வலம் வரும் அம்மா வின் அன்புப் பார்வை அவனைத் தடுமாறச் செய்கிறது.

அம்மாவுக்கென்று அவன் என்ன செய்திருக்கின் றான்? படித்து பாஸாகி உத்தியோகம் தேடி காத லித்துக் கல்யாணம் கட்டிக் குழந்தை பெற்று .....

என் மகன் இப்படி இப்படி இருக்கிறான் என்று கூறிக் கூறிப் பெருமைப்படும் நெஞ்சம் அது!

எனக்கு என்ன செய்தாய் என்று எதிர்ப்பார்க்கும் நெஞ்சமல்ல... இப்படி ஒருநாள் வருவதுவும் "இனி எப்பப்பா?....." என்னும் கேள்வியுடன் விடை பெறுவதுவும்தான்; அவன் செய்வது!

இந்த வருகைதான் அந்தத் தாயுள்ளத்தை எப்படி ஆட்கொண் டுவிடுகிறது!

அம்மாவுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்னும் உறுத்தலில் ஒரு தடவை கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு போனான் தன்னு டன் வைத்துக்கொள்ள!

இந்தக் குளிருக்கும் கொழும்பின் சூட்டிற்கும் அம்மா திண்டாடிப் போனார்கள். பட்டியில்லை, மாடில்லை, சுற்றிவரத் தோட்ட மில்லை, பிடுங்கிச் சமைக்கக் காய்கறியில்லை! அம்மாவுக்கு ஒரு நாள் போவது ஒரு மாதம் போல் தெரிகிறது.

மகன் வீட்டில் மாட்டிறைச்சி ஆக்குகின்றார்கள்! கொழும் பில் இதெல்லாம் சகஜம்;: சாதாரணம். ஆனால் அம் மாவுக்கு...

" .....எனக்கு...... தனியா......" என்றார்கள் மகனி டம் ஒரு நாள்.

" உங்களுக்கு அதெல்லாம் இல்லே தனியாத்தான்" என்று தொடங்கிய மகனிடம் மெதுவாகக் கூறினார்கள்: "தனியா ஒரு கோப்பயும் ஆப்பயும்பா!...... நீங்க பாவிக்ற ஆப்ப, கரண்டி எல்லாம்...... வாணாம்"

மருமகளிடம் அம்மா மூச்சு விடமாட்டார்கள். ‘ வாம்மா, இரும்மா’ என்றுகூடச் சொல்லமாட்டார்கள்: ‘வாங்க, இருங்க’ தான். மரும கள் அம்மாவுக்கு ஒரு மகாராணி மாதிரி! என் மகனை நம்பி வந்தவளாயிற்றே என்னும் நினைவு.

பல்லைக் கடித்துக்கொண்டு ஒரு பத்து நாள் இருப்பார்கள் அவ் வளவுதான்!

தான் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டும் என்பதைத் தவிரப் பிள்ளைகள் தனக்குச் செய்யவேண்டும் என்னும் எதிர்பார்ப்பு இல்லாதவள் தாய். நம்மைச் சுற்றி ஆயிரம்பேர் இருக்கலாம். அன்பைச் சொரியலாம். ஆனால் யாருமே அம்மாவாக ஆகிவிட முடியாது!

அம்மா அம்மாதான்!

மாதுளை மரத்தைத் தாண்டிப் பட்டியில் மாடுகளிடம் நின்று பயந்து பயந்து தொடும் மனைவி, மகளைக் கேலியாகப் பார்த்துப் பசுவின் மடியில் கை வைத்துக் காம்பை இழுத்துப் பாலைப் பீய்ச்சிக்காட்டிப் பெருமைப்பட்டுக்கொண்டு கீழே நடப்பான், அவன்.

மடியில் கை பட்டதும் பசு சிலிர்த்துக் கொள்வதை வேடிக்கை பார்த்து நிற்கும் மகள். உடலைக் கூனி வாலை உயர்த்தி அது தடதடவென்று பெய்ய ஆரம்பித்ததும் தெறிக்க ஆரம்பித்ததும் காலைத் துடைத்தபடி ஓடி வந்துவிடுவாள்!

பட்டிக்குக் கீழே ஒரு நீரோடை. தண்ணீர்க் கான் அருகே தம்பி ராசு கோழி வெட்டிக்கொண்டிருப்பான். அவன் தலைக்கு மேலா கப் பலாமரத்தில் முற்றாத காய்களின்மேல் தாவித்தாவிப் பாய்ந்து, பழுத்திருக்கிறதா என்று வாசனை பிடிக்கிறது அணிற் கூட்டம்.

" அணில் பழம் தேடுது, பாத்தியா" என்று மகளுக்குக் காட்டுவான்.

தம்பி கோழி வெட்டும் லாவகத்தை ரசித்துக்கொண்டு நிற்பாள் மனைவி.

ஏதோ வாசம் மூக்கைத் துளைக்கிறது. நுனி மூக்கு விரிந்து வாச னைக் காற்றை மாற்றிக்கொள்கிறது.

" அன்னாசி ஒண்ணு பழுத்திரிச்சி. கொஞ்சம் இலை சருகெல் லாம் போட்டு மூடித்தான் வச்சேன்! காக்கா சனியனுக உடுமா! கொத்தியிருக்கும்: அதுதான் கமகமக்குது!........" என்று கோழியை அப்படியே வைத்துவிட்டுத் தம்பி எழுந்து போய் அன் னாசிப் பழத்தை ஒடித்து எடுத்து வந்து நீட்டுவான்.



மகள் வாங்கிக்கொள்வாள். கொண்டைக்குக் கீழே லேசாகக் கொத்தியிருக்கிறது காகம். வாசனை தாங்கமுடியவில்லை.

" வெட்டித் தர்றேன் பெறகு" என்றபடி கோழி வெட்டுவதில் குந் திக்கொள்வான் தம்பி.

நீரோடையின் இருமருங்கிலும் கரும்பு செழித்து நிற்கிறது. கரும் போலையின் அடிப்பக்கம் கறுப்புக் கறுப்பாய் ஆடியாடி அமர்ந் திருக்கும் அழகான சின்னச் சின்ன பூச்சிகள் இலை ஆடியதும் பறந்து மறுபடியும் அதேபோல் கூட்டமாக அமரும் காட்சி கண் கொள்ளாதது. மனைவிக்கும் மகளுக்கும் கரும்பை ஆட்டி ஆட் டிக் காட்டிக்கொண்டிருப்பான் அவன். பூச்சிகள் எழுந்து பறப்ப தையும் மீண்டும் அமர்வதையும் கண்டு ரசிக்க. இப்படி ஒவ்வொன் றையும் வியப்புறும் வண்ணம் காட்டி அவர்களின் ஆயாசத்தை, தனிமையை, இட வித்தியாசத்தை விரட்டிப் பொழுதைக் கழித்துவி டும் எண்ணம் அவனுடையது.

சஞ்சீவி
**சிறுகதை**

"அண்ணிக்கும் மகளுக்கும் வேடிக்க காட்டுறியா, கோழி வேல நடக்குதா? அரக்கப் பறக்க அள்ளிப்போட்டுக்கிட்டு அனுப்பத்தான் வேண்டி வரும்! சுருக்காக் கொண்டாந்து குடு" என்று இளைய மகனை எச்சரித்த அம்மாவின் குரல், "கரும்போலயத் தடவிப் பார்க்க வேணாம்ணு அம்மாகிட்ட சொல்லும்மா வெட்டுறது தெரி யாம வெட்டிப்புடும் வெரல...." என்று பேத்திக்கும் எச்சரிக்கை விடுக்கிறது.

கரும்பிடமிருந்து விலகி நின்றுகொள்வாள் மருமகள்!

"அதே பஞ்சு மாதிரி வெரல்! அறுத்தாலும் ஆழமாத்தான் அறுத் துப்புடும்" என்று ஒத்தூதும் தம்பி மனைவியின் குரல்.

அம்மா நீரோடை அருகே வந்துவிடுவார்கள். "இதறுதி பாத்தது போதும், இனிப் பெறகு பாக்கலாம், வாங்க தேத்தண்ணி குடிக்க!....."

"இப்பத்தானே குடிச்சோம்?"

"அது வெறுந் தேத்தண்ணிதானே, காலையாகாரம் ஏதுஞ் சாப் புடுறதில்லியா! சுடச்சுட உப்புமா கெளறியிருக்கேன்.... ஆறிப் போயிறும், வாங்க" என்று மருமகளையும் பேத்தியையும் அழைப் பாள். பேத்தியிடமிருந்து வாங்கும் அன்னாசிப் பழத்தைக் கீழே வைப்பாள் " பச்சப் புள்ள கையில் இதத் தூக்கிக் குடுத்தா எம்மா நேரம் வச்சிருக்கும்!" என்றபடி.

"நீ வல்லையா சாப்புட?" என்று தம்பியைக் கேட்பான் அவன்.

"இதோ முடிஞ்சிறிச்சி நீங்க நடங்க நான் வந்துடுறேன்" என்பான் தம்பி. எட்டி நாலைந்து வாழை இலை நுனிகளை நறுக்கிக் கொள்வார்கள் அம்மா. அவனால் நம்ப முடியவில்லை! அதற் குள் அம்மா என்னென்ன செய்கிறார்கள்! அந்தக் கைகளுக்குள் என்ன மாயை இருக்கிறது! தாயுடன் அறுசுவைபோம் என்று அன்று சொன்னவன் சும்மாவா சொல்லி வைத்திருப்பான்?

இன்னும் காய்கறித் தோட்டம் காட்ட வேண்டும்! கொண்டை நாரான் மரம், பனைபோல உயர்ந்து நிற்கும். கறிவேப்பிலை மரம், சேனையில் நிற்கும் கொய்யா மரங்கள்.....

அத்தனையும் பார்த்து, பறித்து, மென்று, துப்பி முடிய நேரம் சரியாகிவிடும். பிறகு நடந்த களைப்பு நீங்கக் கொஞ்சம் உட்கா ரப், பகல் சாப்பாட்டு நேரம் வந்துவிடும். பகல் சாப்பாடு விருந்து தான். சாப்பிட்டு முடித்துக் களைப்பாறி அவசர அவசரமாகத் தேனீர் தயாரித்து அதையும் குடித்து ரெடியாகியதும் மலை போல் நிற்கும் படியேறும் படலம்! இருநூற்றறுபது படிகளை ஏறி முடிப் பதற்குள்....

சாப்பிட்ட விருந்துச் சாப்பாடு, குடித்த தேனீர் அத்தனையும் எங் கேயென்று போய்விடும்!

கார்க்காரன் வந்து ஹோர்ன் அடித்துக்கொண்டு நிற்பான்.

இதுதான் ஆண்டுக்கு இரண்டு தடவை அல்லது மூன்று தடவை என்று நடக்கும் அம்மா தரிசனம்! பழைய கதை.

அப்போதெல்லாம் அவ்வளவாகத் தோன்றுவது கிடையாது. முழுமு தற் காரணமே அம்மா! அம்மா வின் பராமரிப்பு! தங்களைச் சுற் றிச் சுற்றி வந்து நிற்கும் அம்மாவின் அன்புவட்டம்!

இப்போது அம்மா படுக்கையில். ஒரு பழந்துணி போல் கட்டிலின் ஒரு மூலையில் கிடக்கின்றார்கள்.

கையில் ஆட்ட ஓட்டமில்லை. கால்களில் ஒரு அசை வில்லை. உடலில் ஒன்றுமே இல்லை.

சீக்கிற்கோ தளர்ச்சிக்கோ இடம் கொடாத, உழைத்து உரமேறிய உடல் என்று அவனே பெருமைப்பட்ட உடல்தான் இப்படிக் கசங்கி, நொடிந்து, நைந்து போய் நார் நாராய்.........கிடக்கிறது.

அவனையும் மருமகளையும் பேத்தியையும் கண்ட தும் அந்தக் கண்களிலே ஒரு ஒளி! உதட்டிலே ஒரு சிரிப்பின் நெளிவு! அவ்வளவுதான். ‘வந்துட்டி யாப்பா!’ என்னும் மனத்திருப்தி!

கைகள் போர்வைக்குள் நடுங்குவதுபோல் ஒரு துடிப்பு. கம்பளிக்குள் கையை விட்டு அம்மாவின் கைகளைப் பற்றிப் பிடித்தான். மனைவியினதும் மகளினதும் கைகளையும் உணர்வற்றுச் சோர்ந்து கிடக்கும் அந்தக் கைகளுடன் சேர்த்துப் பின் எடுத்து விட்டான். இந்த மாதத்திலேயே இது இரண்டாவது வருகை. இரண்டு தடவையும் தம்பிதான் தந்தி கொடுத்திருந்தான்.

‘அம்மாவை நம்ப ஏலாதிருக்கிறது. உடனே வரவும்.’ என்று.

அம்மாவைப் பார்த்த டாக்டர்கூட, "ஆஸ்பத்திரி அது இதெல்லாம் வேண்டாம்! மிஞ்சிமிஞ்சிப் போனா ரெண்டு மூணு நாள் தாங்கும்! எதுக்கு ஆஸ்பத்திரியில சாக விடணும்? ஆண்டு அநுபவிச்ச வீட்டுலயே இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டார்!

அம்மாவுக்கும் எழுபது பிந்திவிட்டதுதானே!..........

அம்மா கண்களை மூடிக்கொண்டதும் வெளியே வந்து அவர்கள் நின்று கொண்டார்கள்.

அம்மா எழுந்து நடமாடாத அந்தச் சின்னக் காம்பிராவை அவ னால் கற்பனை செய்யக்கூட முடியவில்லை.

அம்மா சுற்றுமுற்றும் பார்த்து விழித்தார்களாம். வாயே திறக்காத அவர்கள் "அண்ணன் வரலையா?....." என்று மெதுவாகக் கேட் டார்களாம். பயந்துபோன தம்பி என்ன செய்வான்? தந்தி அடித் திருக்கின்றான்!

‘இருங்கம்மா’ என்று அம்மா இஸ்தோப்பில் இழுத்துப் போட்டு மகாராணி மருமகளை அமரச் சொல்லும் அந்த நாற்காலியில் ஒரு வெள்ளிக் குத்துவிளக்கு, பச்சை அரிசி, உறைந்து கட்டியா கிவிட்ட ஒரு போத்தல் தேங்காயெண்ணை, ஊதுபத்தி மஞ்சள் இத்தியாதிகள் ரெடியாக இருக்கின்றன. அறுபதாம் பச்சைக் கொப்புகள் லோட்டாத் தண்ணீரில் தலையாட்டிக்கொண்டி ருக்கின்றன.

மகன்களால் என்ன செய்துவிட முடியும் இப்படித் தயாராய் வைத் துக்கொண்டு சோகம் காட்டும் முகங்களுடன் சுற்றிவந்து நிற்ப தைத் தவிர?

மூத்தவன்பாடு தர்மசங்கடமாக இருக்கிறது. எவ்வளவு நேரம் என்று இருக்க முடியும்?

நான் போகட்டா என்று எப்படிக் கேட்க முடியும்?....... மனைவி மாதுளை மரத்தடியில், மகள் பாட்டியின் கால்மாட்டில்......சீக்கி ரம் செத்துப் போம்மா என்று அம்மாவின் காதுக்குள் சொல்லவா முடியும்?

சென்ற முறையும் இப்படித்தான். இருந்திருந்து பார்த்துவிட்டுக் கிளம்பிப் போய்விட்டார்கள்.

ஏழெட்டு நாட்களுக்குள் இரண்டாவது முறையாக வந்திருக்கின் றான் குடும்பத்துடன். கோச்சுக்காரனும், பஸ்காரனும் கார்க்காரர் களும் இவனைக் கடனாளியாக்குகின்றனர்.

அண்ணன் தம்பியையும் தம்பி அண்ணனையும் பார்ப்பதுவும் திரும்பிக் கொள்வதுவுமாக.......

"இந்த முறை ... அம்மா ..... ஏமாத்த மாட்டார்கள்........" ஏன்று திக்கித் தடுமாறிக் கூறுகின்றான் தம்பி.

அண்ணன் குடும்பத்தை அனாவசியமாக அசௌகர்யத்துக்குள் ளாக்கிவிடுகின்றோமோ என்னும் ஒரு குற்ற உணர்வு தம்பிக்கு.

தம்பியின் வாயைத் தனது விரலால் மூடுகின்றான் தமையன்.

" டாடி, டாடி! பாட்டி எழும்புது!" என்று கத்திக் கொண்டே வெளியே ஓடி வந்தாள் மகள். எல்லாரும் உள்ளே ஓடி வந்து சுற்றி நின் றார்கள்.

அசையாமல் கிடந்த அம்மாவின் கை, ஓட்டை நகங்களுடன் கம்பளிக்கு வெளியே எழுந்து நிற்கிறது. வாயைக் குவித்துக் காட் டுகின்றார்கள் அம்மா.

"பாலூத்தச் சொல்லுங்க மூத்த மகந்தானே?" என்கிறது கூட்டத் துக்குள் இருந்து ஒரு கிழக் குரல். "........த...தண்ணி..." என்ற சத்தம் வருகிறது அம்மாவின் குழிந்த வாயிலிருந்து!

வெதுவெதுப்பான சூட்டுடன் வெள்ளித் தம்ளரில் தண்ணீர் வரு கிறது.

*(08 ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
30 ஒக்ரோபர் 2022

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்


## 1505–1948 வரை

எனது சகோதரி தீவுப்பகுதிக்குச் சென்ற போது ,அங்கு சைவப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுக்கொண்டிருந்த மீனாட்சி என்ற 12 வயதுச் சிறுமி எம்முடன் உடுவில் பாடசாலையில் வந்து படிக்க விரும்பினார். நாங்கள் அவளது பெற்றோரை அணுகினோம். அவர்களும் அவளை எம்முடன் அனுப்பச் சம்மதித்தனர். உடுவில் பாடசாலையில் பிரார்த்தனை அறைகள் சில உள்ளன . அந்த அறைகளில் மாணவிகள் தாமே சென்று பிரார்த்தனையில் ஈடுபட முடியும். உடுவில் பாடசாலையில் ஒரு வழக்கம் உள்ளது, வயதில் மூத்த மாணவிகள் வயது குறைந்த மாணவிகளை அழைத்துச்சென்று பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும்.

மீனாட்சியை கண்டதும் மேல் வகுப்பு மாணவிகள் வந்து அழைத்துச்சென்றனர்.

**நான் அவளுக்கு 'தமிழ் பைபிள் புதிய ஏற்பாடு' ஒன்றைப் பரிசளித்தேன். பைபிளில் உள்ள கதைகளை வாசித்து என்னிடம் சொல்ல வேண்டுமெனவும் கூறினேன். இங்கு ஒரு பைபிளின் விலை ஒரு பென்னி தான். ஒரு பென்னி ஒரு பெரிய விடய மல்ல. அதன் மூலம் கிடைக்கப்போகும் பலனைத்தான் நாங்கள் பார்க்க வேண்டும்.**

மறுநாள் மீனாட்சி , ஏனைய மாணவிகளிடம் பைபிள் இருப்பதாகவும் தன்னிடம் இல்லையெனவும் அவளது தகப்பன் வாங்கிக் கொடுத்த புத்தகங்களில் பைபிள் இல்லையெனவும் எம்மிடம் கூறினாள். நான் அவளுக்கு 'தமிழ் பைபிள் புதிய ஏற்பாடு' ஒன்றைப் பரிசளித்தேன். பைபிளில் உள்ள கதைகளை வாசித்து என்னிடம் சொல்ல வேண்டுமெனவும் கூறினேன். இங்கு ஒரு பைபிளின் விலை ஒரு பென்னி தான். ஒரு பென்னி ஒரு பெரிய விடயமல்ல. அதன் மூலம் கிடைக்கப் போகும் பலனைத்தான் நாங்கள் பார்க்க



வேண்டும். மீனாட்சி தனது அறைக்குள்ளிருந்து பலத்த சத்தத்துடன் பைபிளை வாசித்துக்கொண்டிருப்பதை நாங்கள் அவதானித்தோம். சில நாட்களின் பின்னர் கிறிஸ்தவப் பாடல் புத்தகம் ஒன்று தருமாறு கேட்டாள். நாங்கள் இனிய கிறிஸ்தவப் பாடல் புத்தகம் ஒன்றை அன்பளிப்புச் செய்தோம். இந்தப்புத்தகத்தின் விலையும் ஒரு பென்னி தான். அவள் மறுநாளே கிறிஸ்தவப் பாடல்களை இனிமையாக பாடத்தொடங்கி விட்டாள். சில நாட்களின் பின்னர் அவளது தந்தை அவளைப். பார்க்க வந்தார். கேற்றடியில் தந்தையைக் கண்டதும் மைதானத்திலிருந்து ஓடிச் சென்று 'அப்பா நீங்களும் கிறிஸ்தவத்தில் இணைந்து கொள்ளுங்கள்' என மீனாட்சி கூறினாள். பாடசாலை விடுமுறை நாட்களில் மீனாட்சி வீடு திரும்பிய பின்னர், வீட்டில் நிலவொளியில் தான் சில கிறிஸ்தவப் பாடல்களை பாடப்போவதாக கேட்டுள்ளாள். தமிழர்களுக்கு பாடல்கள் என்றால் பிடிக்கும். அதே போல் கதை சொல்வதும் பிடிக்கும். விளக்கு வெளிச்சத்தில் பாலன் பிறப்பு பற்றி மீனாட்சி வாசித்தாள். பின்னர் அவள் 'நான் பாடசாலையில் உண்மையான கடவுளைப் பிரார்த்தனை செய்ய பழகியுள்ளேன். இப்போது பிரார்த்தனை செய்யட்டுமா?' எனக் கேட்டுள்ளாள்.

உடனே அங்கு மயான அமைதி நிலவியது. ஏனென்றால் அவர்கள் சிலைகளை வணங்குபவர்கள். ஆனால் அந்த துணிச்சல் மிக்க சிறுமி தனக்கே உரிய பாணியில் தனது தாய், தந்தை, பாட்டன், பாட்டி, சகோதரர்கள் அனைவருக்காகவும் பிரார்த்தனை செய்திருக்கிறாள். தொடர்ந்து தனது விடுமுறை நாட்களில் அவள் இவ்வாறு பிரார்த்தனை செய்திருக்கிறாள். அத்துடன் தன்னை தேவாலயத்துக்கு அழைத்துச்செல்லுமாறும் தந்தையை வற்புறுத்தியிருக்கிறாள் . அம்மா தன்னை தேவாலயத்துக்குச் செல்லும்படி கூறியதாகவும் சொல்லியிருக்கிறாள். அதற்கு அவளின் தந்தை 'இல்லை மகளே! நாங்கள் பிள்ளையார் ,கந்தசாமி, வைரவர் ,சிவன் ஆகிய கடவுள்களை வணங்குபவர்கள்' எனக் கூறியுள்ளார். அத்துடன் தான் தேவாலயத்துக்குச் சென்றால் அயலவர்கள் தான் கிறிஸ்தவத்தை தழுவி விட்டதாக தன்னைப்பார்த்துச் சிரிப்பார்கள் எனவும் கூறியுள்ளார்.

அதற்கு அவள் 'அப்பா, நான் தேவாலயத்துக்கு செல்வதாக அம்மாவுக்கு வாக்கு கொடுத்துள்ளேன். தய்வு செய்து என்னை அழைத்துச்செல்லுங்கள்' என காலைச் சாப்பாட்டையும் சாப்பிடாமல் கெஞ்சியுள்ளாள். இது அவளது தந்தையின் இதயத்தை தொட்டு விட்டது. இலங்கையிலுள்ள தகப்பன்மாரின் இதயம் இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளில் வசிக்கும் தகப்பன்மாரின் இதயத்தை விட மென்மையானது. அவர்கள் தமது பிள்ளைகளுக்காக எதுவும் செய்வார்கள்.

மீனாட்சியின் தந்தை 'அழாதே பிள்ளை, நான் இந்த ஒரு முறை மட்டும் உன்னை அழைத்துச் செல்கிறேன்' எனக் கூறியுள்ளார். மீனாட்சியின் தந்தை அவளை தேவாலயத்துக்கு அழைத்துச்சென்ற போது உள்ளூர் போதகர் அவரை அடுத்த முறையும் வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். மீனாட்சியின் தந்தை அடுத்த முறையும் சென்றுள்ளார்.

நான் யாழ்ப்பாணக்கல்லூரிக்கு வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்குச் சென்ற போது மீனாட்சி வாசல் கதவருகே நின்றாள். மீனாட்சி தனது பெற்றோரையும் அழைத்து வந்திருந்தாள். அவர்கள் சிறு படகு மூலம் கடலைக் கடந்து பல மைல்கள் நடந்து வந்திருந்தனர். விடுமுறை முடிந்து பாடசாலை ஆரம்பமான போது மீனாட்சி யின் பெற்றோர் ஒரு ஆட்டையும் ஒரு போத்தல் நெய்யையும் அன்பளிப்பாக கொண்டு வந்து தந்தனர்.

(வரலாறு தொடரும்)




# வெற்றி முழக்கமிட்ட கிழிந்த காலணிகள்!




ஆர்.பிரகாஷ்

கிரிக்கெட் உலகம் விந்தையானது. அது தன்னகத்தே அளவற்ற ஆச்சரியங்களையும், சுவாரஷ்யங்களையும் கொண்டமைந்ததும் கூட. இந்த ஆச்சரியங்களினதும் சுவாரஷ்யங்களினதும் ஒட்டு மொத்த வடிவம்தான் இன்றைய சிம்பாப்வே கிரிக்கெட் அணி.

சரியாக இன்றைக்கு ஓராண்டுக்கு முன்னர் சிம்பாப்வே அணியின் வீரர் ரியான் பர்லின் ருவிற்றர் பதிவு, அந்த அணியின் பொருளாதார நிலையை வலுவாகவே படம்போட்டது.

'எங்கள் அணிக்கு 'ஸ்பொன்சர்' எவராவது கிடைக்கமாட்டார்களா? அது நடந்தால் ஒவ்வொரு தொடர் முடிந்த பிறகும் நாங்கள் எங்கள் காலணிகளுக்கு ஒட்டுப்போட வேண்டி இருக்காது' என்றவாறாக அமைந்தது அந்தப் பதிவு. காலணிகள் கிழியக்கிழிய அதை மீண்டும் மீண்டும் ஒட்டியொட்டி விளையாடும் 'பொருண்மிய அவல நிலையில்' சிம்பாப்வே வீரர்கள் இருந்தனர். அதுமட்டுமல்ல, இந்த ருவிற்றின் பின்னர் சிம்பாப்வே கிரிக்கெட் வீரர்கள் எதிர்கொள்ளும் பல இன்னல்கள் படிப்படியாக வெளிவந்தன. சிம்பாப்வே வீரர்கள் ஊதியமின்மையால் பகுதி நேரத்தில் வேறு தொழில்களுக்குச் செல்கின்றமை உள்ளிட்ட பல விடயங்கள் பேசுபொருள்கள் ஆகின. இதன் பின்னர்தான் சிம்பாப்வே அணிக்கு நிதி மற்றும் விளம்பர அனுசரணையாளர்கள் கிடைத்தனர்.

இந்த நிதி அனுசரணைகள், இறக்கும் தருவாயில் இருக்கும் கொடிக்கு ஒரு படர்கொம்பு கிடைத்தால் எப்படியிருக்குமோ அப்படி ஆக்கியுள்ளன சிம்பாப்வே அணியை. இன்று இருப்பது 'சிம்பாப்வே 2.0'.


நிதி அனுசரணைகள் கிடைத்தமைக்குப் பின்னர் இதுவரை 32 'ரி=20' ஆட்டங்களில் விளையாடியுள்ள சிம்பாப்வே அணி 17 ஆட்டங்களில் வெற்றிபெற்றுள்ளது. 21 ஒருநாள் ஆட்டங்களில் 5 ஆட்டங்களில் வெற்றிபெற்றுள்ளது. இந்த 5 ஒருநாள் ஆட்டங்களில் கிடைத்த வெற்றிகளில் ஒன்று அவுஸ்திரேலிய அணிக்கு எதிரானது. அதுவும் அவுஸ்திரேலிய மண்ணில் வைத்து அவுஸ்திரேலியாவை வீழ்த்தி வியக்கவைத்தது சிம்பாப்வே.

நடைபெற்றுவரும் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் சிம்பாப்வே அணி பலம் வாய்ந்த பாகிஸ்தானை பதம் பார்த்துள்ளது. வெறும் 130 ஓட்டங்களுக்குள் பாகிஸ்தானைக் கட்டுப்படுத்தி தன்னை ஒரு ஆபத்தான அணியாக சர்வதேசத்துக்கு அடையாளப்படுத்தியுள்ளது சிம்பாப்வே.

பொதுவாகவே ஆபிரிக்கக் கண்டம் ,அனைத்திலும் புறக்கணிக்கப்பட்ட ஒரு கண்டமாகத்தான் இருந்து வருகின்றது. அவர்களிடம் பணம் இருந்ததில்லை. ஆனால், மனோதிடம் உச்சக்கட்டமாக இருக்கின்றது.

உதாரணமாக, ஒலிம்பிக் போட்டிகளில் மரதன் போன்ற தொலைதூர ஓட்டங்களைப் பாருங்கள். அதில் வெற்றியீட்டுபவர்கள் ஆபிரிக்கர்களாகவே இருப்பார்கள். மரதனுக்குத் தேவை மனோதிடம். இந்த வெற்றிப் பின்னணி அதுதான். அந்த மனோதிடத்துடன் கொஞ்சம் பொருளாதாரப் பலமும் சேர்ந்தால் கிழிந்த காலணிகளும் வெற்றி முழக்கமிடும். இதற்கு சிம்பாப்வே கிரிக்கெட் அணி ஓர் எடுத்துக்காட்டு. இதே சிம்பாப்வே அணி இன்னும் பல ஆச்சரியங்களை கிரிக்கெட் உலகில் நிகழ்த்தத்தான் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆனின் டயரி

○ கோகுலராகவன்

உலகிலேயே மிக பிரபல்யமான தினக்குறிப்பு என்றால் அது ஆஃன் பிராங்க் (Annelies Marie Anne Frank) என்ற 15 வயது சிறுமி எழுதிய தினக்குறிப்புத்தான்.

ஆஃன் பிராங்க், டொச் மொழியில் எழுதிய அவளது தினக்குறிப்பு 65 மொழிகளில் "ஆன் பிஃராங்கின் தினக்குறிப்பு" என்ற பெயரில் புத்தகமாக வெளி வந்து, 31 மில்லியன் பிரதிகள் விற்பனையாகின. ஆனால் அதைப் பார்க்க அவள் உயிரோடு இருக்கவில்லை.

ஆஃன் பிராங்க் 1,929 இல் ஜேர்மனியில் பிஃராங் பேட் நகரில் பிறந்தவள். தகப்பன் ஒட்டோ பிராங்க் (Otto frank ) வசதியான யூத வணிகர்.

இங்குதான் பிரச்சினை ஆரம்பிக்கத் தொடங்கியது. ஜெர்மனியில் ஹிட்லரின் நாஸிக்கட்சி அதிகாரத்துக்கு வந்தபின் யூத இனம் மீதான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. ஒட்டோ பிராங்குக்கு இரண்டு பெண்குழந்தைகள். ஒருத்தி ஆஃன் பிராங்க், மற்றையவள் அவளுடைய அக்கா மார்கொற் பிராங்க் (Margot frank).

இரண்டு குழந்தைகளையும் குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டும்.1940 இல் ஒட்டோ குடும்பத்தினர் நெதர்லாந்து நாட்டுக்குத் தப்பிச் சென்றார்கள்.




21

இதனால் ஆஃன் பிராங்க் நீண்ட நாள்களை நெதர்லாந்தின் அம்பஸ்ரன் நகரில் கழிக்கவேண்டியிருந்தது. ஆனால் துரதிர்ஷ்டம் அவர்களைப் பின் தொடர்ந்தது.ஹிட்லரின் நாஸிப்படைகள் நெதர்லாந்தையும் கைப்பற்றின. ஒட்டோவால் வேறு நாட்டுக்குத் தப்பி செல்ல முடியவில்லை.தன் தொழிற்சாலைக்கு பின்புறமாக அவர் மறைவிடம் ஒன்றை உருவாக்கிக் கொண்டார். அதற்குள் தாய், தகப்பன், அக்காவுடன் ஆன் பிராங்க் இரண்டு வருடம் மறைவு வாழ்க்கை வாழ்ந்தாள். காலப்போக்கில் அந்த மறைவிடத்தில், ஒரு மருத்துவர் உட்பட நான்கு பேரும் இணைந்து மறைந்திருந்தனர்.

இரண்டு மூன்று வேலைக்காரர்களின் உதவியுடன் அந்த மறைவு வாழ்க்கை நடந்தது. இரண்டு வருடம் யாருமே வெளியே தலை காட்ட முடியாத நிலை . இதில் யாருமே விதிவிலக்கல்ல. யூதராக இருந்தால் போதும், கண்டதும் கைதுசெய்யப்பட்டு வதை முகாமுக்கு அனுப்பப்படுவார்கள். இதற்கு முன்னதாக, ஆஃன் பிராங்கின் 14 வது பிறந்த தினத்தன்று அவளுக்கு ஒரு டயரி பரிசாகக் கிடைத்தது. அந்த டயரியில் அவள் தங்களுடைய இருண்ட கால , மறைவிட வாழ்க்கையை எழுதத் தொடங்கினாள். இரண்டு வருடம் வெளி உலகம் தெரியாத வாழ்க்கை, மிகக் கடினமான ஒன்றல்லவா?

பதினைந்து வயதில் இருண்ட உலகத்தில் வாழும் போது சித்தம் கலங்கி குழம்பி விடும் . ஆனால் ஆஃன் பிராங்க் குழம்பாமல் இருந்து, தனது மன எழுச்சியை எழுதத் தொடங்கினாள்.

இதுவே அவளை உலகறியச்செய்தது.

"நான் இப்போதும் நம்புகிறேன் . இங்கே சில முரண்கள் நடந்தாலும் மனிதர்கள் இதய பூர்வமாக நல்லவர்கள்." கிற்றி (kitty) என அழைக்கப்பட்ட தன் கற்பனை நண்பனுக்கு ஆன் இவ்வாறு எழுதத் தொடங்கினாள். சிலவேளை தன்னுடைய டயரியையே ஆன் இவ்வாறு அழைப்பதாகத் தோன்றும்.

அந்த இருண்ட காலத்தில் இருந்து தப்பி வந்த பின் ஆஃனுக்கு ஒரு பத்திரிகையாளராக , அல்லது எழுத்தாளராக வர விருப்பம் இருந்தது. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

"மக்களை நான் சந்திக்கமுடியாது போனாலும் மக்களுக்கு பயனுள்ளவளாகவோ மகிழ்ச்சியை தரக்கூடியவளாகவோ இருக்க வேண்டும். "

"மரணத்தின் பின்னும் நான் வாழ வேண்டும்."

"நான் எழுத வேண்டும் . மிகப்பெரிய அற்புதத்தை என்னால் எழுத முடியுமா?"

இவ்வாறான அகம் சார்ந்த கேள்விகள், உரையாடல்கள் பல ஆஃனின் நாட்குறிப்பில் இருக்கின்றன.

இரண்டு வருடங்களின் முடிவில் 1944 ஆவணி மாதம் 4 ஆம் திகதி ஆஃனின் கனவுகள் யாவும் நிராசையாகின.அந்த மறைவிடத்தினை நோக்கி வந்த நாஸிக்கள் அனைவரையும் கைது செய்தனர்.

காட்டிக்கொடுப்பா? அல்லது புலனாய்வுத் தகவலா ? என்பது இன்றுவரை தெரியாது. குடும்பத்திலிருந்து அனைவரும் வலுக்கட்டாயமாக பிரிக்கப்பட்டு வதைமுகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

அந்த வதை முகாமில் ஆஃனுக்கும் தமக்கை மார்கொற்றுக்கும் விஷக் காய்ச்சல் (thypus) பீடித்தது. மார்கொற் இறந்த மறுநாள் ஆனும் இறந்து போனாள்.

அவள் இறந்த திகதி உறுதிப்படுத்தப்படவில்லை. 1945 இல் ஜெர்மனியை ரஷ்யப் படைகள் கைப்பற்றியதும் தகப்பன் ஒட்டோ பிராங்க் உயிர் தப்பினார். தன்னைப்போல மற்றவர்களும் தப்பி வருவார்கள் என ஏக்கத்தோடு அவர் காத்திருந்தார். ஆனால் யாரும் வரவில்லை.

ஒட்டோ பிராங்க் தாங்கள் ஒளித்து வாழ்ந்த இடத்தை மீண்டும் பார்வையிடச் சென்ற போது ஆனின் டைரியைக் கண்டெடுத்தார்.நாஜிக்கள் அந்த டயரியைக் கண்டுகொள்ளாமல் போனதால், அந்த டயரிக்கு உலகப் பிரபலமாகும் வாய்ப்புக் கிட்டியது.

முதன்முதலில் ஒட்டோ பிராங்க் மகளின் டயரியை வெளிட்டபோது முதலில் அது பெரிதாக எடுபடவில்லை.ஆனால் நாளடைவில் அது உலகப்புகழ் பெற்றதாக மாறியது .

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்ட்வெல்ட் அந்த டயரிக்கு ஆதரவாக பேசியதால், விற்பனை சூடு பிடித்தது.

பின்னர் frances Goodrich ,Albert Hackett ஆகியோரால் இந்த டயரி நாடகமாக எழுதப்பட்டு புலிட்சர் விருதையும் பெற்றுக்கொண்டது.

1959 இல் திரைப்படமாகவும் வந்தது.

ஆன் பிராங்க் வரலாற்றின் துயரமும் பெருமையுமாக மாறிப்போனாள். அவளது ஏக்கம் இன்னொரு இன அழிப்பை நிகழ்த்தாமல் இருக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியது.

"இந்த உலகை முன்னேற்ற யார் விரும்பினாலும் அவர் ஒரு நிமிடம் கூட தாமதிக்க வேண்டாம்."

- என்று ஆஃன் இன்னும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறாள்.

ஆனால் எங்கள் காதில்தான் அது விழவில்லை.

(இன்னும் கதைப்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீன - இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் ஈழத்தமிழர்கள் எப்போதுமே சீனா தொடர்பான முன் எச்சரிக்கையோடுதான் செயற்படுகின்றனர். இருந்தாலும் வடக்கு= கிழக்கு மாகாணங்களுக்கு மிக அருகில் இருக்கும் இந்தியா, ஈழத் தமிழர் விவகாரத்தில் காண்பிக்கும் அலட்சியப்போக்கும், சிங்கள ஆட்சியாளர்களை மாத்திரம் நம்பிச் செயற்படுகின்ற அணுகுமுறைகளும் ஈழத்தமிழர்களிடம் இந்தியா தொடர்பான நம்பகத்தன்மையை இல்லாமல் செய்கின்றன.

இந்தப் பின்புலத்திலேதான் உலக அரசியல் ஒழுங்கு மாற்றங்கள் உருவாக்கப்போகும் விளைவுகள் தொடர்பாகச் சிறிய தேசிய இனமான ஈழத்தமிழ்ச் சமூகம் விழிப்புடன் இருக்க வேண்டிய சூழல் உண்டு. இந்திய - சீன உறவு பற்றிய புரிதலும் இந்தத்தருணத்தில் அவசியம்.

ஏனெனில் புதுடில்லியில் சீனாவுக்கான இந்தியத் தூதுவராகப் பதவி வகித்த சன் வெய்டாங், தனது மூன்று வருடகாலப் பதவியைப் பூர்த்தி செய்யும் பிரியாவிடை நிகழ்வில் கூறிய கருத்துக்கள், இந்திய - சீன உறவின் தன்மையைப் பகிரங்கப்படுத்தியுள்ளன.

சீனாவும் இந்தியாவும் 'புவிசார் அரசியல் பொறியிலிருந்து' வெளியேற வேண்டும் என்று தூதுவர் சன் வெய்டாங் கூறியிருக்கிறார். சீன - இந்திய உறவு என்ற நிலையில் இருந்து அயல் நாடுகளாகவும் உறவைப் பேண முடியாத போட்டி மன நிலையில் இருப்பது ஆரோக்கியமல்ல என்ற தொனியையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.'சீனாவும் இந்தியாவும் ஒன்றாக வளர்ச்சியடைய உலகில் போதுமான இடம் உள்ளது, மேலும் இரு நாட்டு மக்களும் அமைதியாக வாழவும் ஒத்துழைப்பை அடையவும் ஒரு வழியைக் கண்டறியப் போதுமான ஞானம் இருக்க வேண்டும்' என்றும் தூதுவர் சன் வெய்டாங் ஆலோசனையை முன்வைத்துள்ளார்.

ஆகவே சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அமெரிக்க- சீன உறவின் தேவைப்பாடு பற்றிப் பேச, புதுடில்லியில் தனது தூதுவர் பணியை நிறைவு செய்து வெளியேறிய சன் வெய்டாங் சீன இந்திய உறவு தொடர்பாகக் கருத்திடுகிறார். எனவே முரண்பாடுகளில் உடன்பாடாக அமெரிக்க - இந்திய உறவுகளை விரும்பும் சீனா, தனது புவிசார் அரசியல் புவிசார் பொருளாதார நகர்வுகள் அதற்கான ஆக்கிரமிப்புகள் போன்றவற்றை நியாயப்படுத்திக் கொண்டுதான் அயல்நாடுகளுடனான உறவையும் எதிர்பார்க்கின்றது.

இந்த இடத்தில் அமெரிக்கா குறிப்பாக ஜோ பைடனின் பாதுகாப்பு உத்தி இலகுவில் சீன உறவுக்கு வலுச் சேர்க்க ஒத்துழைக்கும் என்று கூற முடியாது. சர்வதேச வர்த்தகத்தில் அமெரிக்க- சீனத் தொடர்பாடல் என்பது வெவ்வேறான நகர்வாக இருந்தாலும், புவிசார் அரசியல் பின்புலம் என்ற பார்வையில் தன்னை மாத்திரம் நியாயப்படுத்தி உறவைப் பேண சீனா விடுக்கும் அழைப்புகளை அமெரிக்கா நிராகரித்தே வந்துள்ளது.ஆனால் இந்தியா முடிந்தவரை சீனாவுடன் உறவைப் பேணவே விரும்புகிறது. ஏனெனில் ரஷ்ய இந்திய உறவே அதற்குக் காரணம்

அத்துடன் சீனாவும் இந்தியாவும் பல்வேறு நிலைகளில் உரையாடல் வழிமுறைகளை நிறுவியுள்ளன. இந்தியக் குடிமக்கள் சீனாவுக்குச் செல்வதற்கான விசா விண்ணப்பச் செயல்முறையை சீனா மேலும் மேம்படுத்தியுள்ளது. நீண்டகாலப் படிப்பைத் தொடரும் மாணவர்கள் மற்றும் வர்த்தகம், வேலைவாய்ப்பு மற்றும் குடும்பமாக இருப்போருக்கான விசா விண்ணப்பங்களையும் சீனா மீண்டும் செயற்படுத்தியுள்ளது.இன்றுவரை இந்திய மாணவர்களுக்கு ஆயிரத்து எண்ணூறுக்கும் மேற்பட்ட விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன.சீன இந்திய அரசுகளிடையே புரிந்துணர்வுடன் அனைத்துப் பரிமாற்றங்களும் நன்றாகச் செயற்படுத்தப்படுகின்றன.

ஆனால் சீனாவைப் பொறுத்தவரை தன்னை அமைதியின் நாயகனாகக் காண்பித்துக் கொண்டு உலக அரசியல் ஒழுங்கில் தனது அதிகாரத்தைப் பலப்படுத்தவே முற்படுகின்றது என்பது பகிரங்கம். அதாவது முன்னர் அமெரிக்கா போன்ற மேற்குலக, ஐரோப்பிய நாடுகள் கடைப்பிடித்த அணுகுமுறையைச் சீனா தற்போது கையாள்கின்றது.இது ஆசியப் பிராந்தியத்தில் உள்ள இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு ஆபத்தான ஒன்று. இந்தியாவுக்கு இந்த ஆபத்துக்கள் புரியாமலில்லை. புதுடில்லியைப் பொறுத்தவரை வட இந்தியப் பாதுகாப்பும் தனது தேச நலனும் மாத்திரமே பிரதான நோக்கமாக உள்ளது.அதனாலேயே முரண்பாட்டில் உடன்பாடாகச் சீன உறவை மேம்படுத்த இந்தியா முனைகிறது. இந்தோ - பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு விவகாரம் என்று வரும் போது, சிங்கள ஆட்சியாளர்கள் அமெரிக்க இந்திய நிலைப்பாட்டுக்கு ஆதரவாகச் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கையும் இந்தியாவுக்கு உண்டு. இதன் காரணமாகவே ஈழத்தமிழர் விவகாரத்தைச் சிங்கள ஆட்சியாளர்களின் விருப்பத்துக்கு ஏற்ப இந்தியா கையாள்கின்றது. அதற்கேற்ப சில தமிழ்த் தரப்புகள் புதுடில்லியால் கையாளப்பட்டும் வருகின்றன என்பதும் பட்டவர்த்தனமே.

# 10 எனைது ஊரிலும்தான்...

சி.கதிர்காமநாதன்

நான் சொல்வதை நம்புவார்களா?
ஐயோ!
முதலாளி வந்த கையோடு எல்லா வற்றையும் உதறி விட்டுப் போயிருக்க வேண் டும். வேண்டாம் இந்தச் சோதனை.
"சார் சார்!" என்று பலமுறை அழைத்தபின் தான் சுயநினைவுக்கு வந்தேன்.
"என்ன யோசனை? நாளைக்கு சாயங்காலம் சென்னைக்குப் புறப்பட்டுப் போறீங்கதானே சார்?"
"இல்லை வெங்கிட்டு. அங்க இப்ப நல்ல அமளியா இருக் கும். இங்க இருக்கிறதெண்டாலும் பேப்பரைப் பாக்கப் பயமா இருக்கு என்ன செய்யிறது? "
"ஒரு யோசனையும் வேணாம். நாளைக்கு நீங்க சென் னைக்குப் புறப்பட்டுப் போறீங்க, நான் வேனில வந்திடுவன். எல்லாத்துக்கும் பயந்து சாகிறீங்க.
நல்ல ஆள்தான் நீங்க."
அங்கு சிதம்பரம் யோசிப்பான். மற்றவர்கள் என்ன கதைப் பார்கள்? கற்பனை செய்ய முடியவில்லை. திட்டித் தீர்ப் பார்கள். எல்லாம் எங்களாலதான் என்று நச்சரிப்பார் கள். நான் அங்கு இல்லாதது ஒருவிதத்தில் நல்லது. வெங்கிட்டு இருக்கும் தைரியத்தில் மனது கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.
மறுநாள் சொன்னமாதிரிக் கடை முதலாளி எல்லாவற் றையும் தயார்படுத்தி விட்டார்.
"சார் நான் வேனில போயிடுறேன். இரவு வண்டியில வந்திடுங்க.வெங்கிட்டு கிளம்பி விட்டான். ரூமுக்கு வந்து யோசித்துக் கொண்டிருந்தேன்.
இரவு எப்போது வரும்?
சென்னைக்குப் புறப்படும் பஸ்சில் ஏறி உட்கார்ந்த பிறகே மனப்பதற்றம் குறையத் தொடங்கியது. என் பக் கத்தில் இருந்தவர் அடிக்கடி என்னோடு பேச முயன்றார். நான் விளங்காததுபோல நடித்துக் கொண்டேன்.
எதற்காக வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டும்? பஸ் நிரம்பி வழிந்தது. கொஞ்ச நேரத்தில் ரீவியிலே படம் போட்டார்கள். மனம் அதில் லயிக்க வில்லை. இப்படி எத்தனை நாளுக்குப் பயந்திருப்பது?
எங்களுக்கென்று சொந்தமான சுதந்திரமான இடம் கிடைக் கும் வரை இந்த நிலை தொடரவேண்டியதுதானா? ஊரிலே கஷ்டமோ? நஷ்டமோ குண்டுமாரி பொழிந்தாலும் மறுத்துச் செல்ல முடியாதவொரு மனநிம்மதி இருக்குமே! அது இங்க இப்போது இல்லை. எதைத் தேடிவந்தேனோ அது இல்லை.
இடையிலே தேநீருக்காக வண்டியை நிறுத்தினார்கள். நான் இறங்காமல் இருக்கையுடன் ஒட்டிக் கொண்டிருந்தேன். ப்ளாட்டில் உள்ளவர்கள் நித்திரைவிட்டு எழுமுன் போய்வி டலாம். கொஞ்சம் நிம்மதியாகப் படுக்கலாம். நித்திரையும், விழிப்புமாக இரவு கடந்தது. தி.நகரில் 5 மணிக்குப் பின் என்னை இறக்கி விட்டுப் போனார்கள். விரைந்து சென்று என் அறையை அடைந்து கதவைத் திறந்தேன். காலடியில் ஒரு கடிதம் தட்டுப்பட்டது.

▣ ▣ ▣ ▣

சட்டென்று விழிப்பு வந்தபோது வாசல்மணி அழைத்துக் கொண்டிருந்தது. மணிக்கூட்டினைப் பார்த்தேன். நேரம் ஒன்பது மணி. உடன் எழுந்து வந்து கதவைத் திறந்தேன். சிதம்பரம். மனதினுள் இருந்த கலக்கங்கள் மெல்லக்மெல் லக் குறையத் தொடங்கின. கைகளைப் பிடித்து இறுக்கியபடி கதிரையில் இருக்கச் செய்தேன்.
"சிதம்பரம் எப்படி இருக்கிறது நிலைமை?"
"பிரச்சினை இல்லை. இரவிலை செக்கிங் நடக்குது. லொட்ஜ்லே கடுமையான செக்கிங். நீ இரவிலே வெளில போகாம இருந்தால் சரி" நான் மௌனமாக இருந்தேன்.
"வீட்ல அம்மா உம்மைப்பத்திப் பேசினபடிதான். பாவம் என்ன செய்கிறீரோ என்று வருத்தப்பட்டார்."
"நான் காலை 5 மணிக்கே வந்திட்டன். ஊரிலை இருந்து வந்த கடிதத்தைப் படிச்சதிலை ஒரே தலையிடியாக் கிடந்தது.



பனடோல் போட்டிட்டு மறுபடி படுத்திட்டன்"
"தபாலிலை என்ன எழுதியிருக்கிறாங்க?"
"முதலாளிதான் எழுதியிருக்கிறார். படிச்சுப்பாரும்" சிதம்பரம் தயங்க, படியும் என்று நான் கடிதத்தை உரிமையுடன் கொடுத்தேன். சிதம்பரம் படித்துவிட்டு என்னைப் பார்த்தார்.
"உமக்கு இவர்களைத் தெரியுமோ?"
"ஓமோம் நான் முந்தி ஊரிலே இருக்கும்போது பார்த்திருக் கிறன். நல்ல மனுஷன், வாத்தியாரா இருந்தவர். பெடியங் களும் பழகிறதுக்கு நல்ல ஆக்கள் கடைசியில இப்படியாகிப் போச்சு"
"ஏன் நீர் வந்தமாதிரிப் பிளேனிலை வர இயலாதோ?"
"அந்த அமளிலை இது நடக்கிற காரியமே? யாழ்ப்பாணத் திலை இருந்து கொழும்புக்கு வரவேணும். இப்ப எல்லாரும் படகிலைதானே வருகினம். பிரச்சினை எண்டவுடனை இவையும் சனத்தோட வெளிக்கிட்டிருக்கினம். வாத்தியா ருக்கு என்னுடைய மாம்பலம் விலாசம் தெரியும். வந்திருந் தால் இஞ்ச வந்திருப்பினம் எண்டு முதலாளி எழுதி இருக் கிறார். எப்பிடி உறுதிப்படுத்துகிறார்கள் கடலிலதான் போயி ருப்பினமெண்டு?"

(தொடரும்)



# இறால் பகோடா



| | |
|---|---|
| இறால் | – 500 கிராம் |
| மிளகாய்த்தூள் | – 1 தேக்கரண்டி |
| மஞ்சள்தூள் | – அரை தேக்கரண்டி |
| சோம்புத்தூள் | – அரை தேக்கரண்டி |
| பூண்டு | – 6 பல் |
| கடலைமாவு | – தேவையான அளவு |
| அரிசி மாவு | – 2 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | – 1 ஆர்க்கு |
| பெரிய வெங்காயம் | – 1 |
| உப்பு | – தேவையான அளவு |
| எண்ணெய் | – 500 மில்லிலீற்றர் |

இறாலை சுத்தம் செய்து, மிகவும் பொடி யாக நறுக்கிக் கொள்ளவும்.

கடலைமாவு, அரிசிமாவு, மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், சோம்புத்தூள், உப்பு இவற்றை சிறிது தண்ணீர் சேர்த்துப் பிசறி வைக்கவும். வெங்காயம், பூண்டு, கறிவேப் பிலை இவற்றை நறுக்கிக் கொள்ளவும்.

வாணலியில் 1 மேசைக்கரண்டி எண் ணெய் ஊற்றி, காய்ந்ததும் வெங்காயம், பூண்டு, கறிவேப்பிலை நறுக்கியவற்றுடன் சூடாக ஊற்றி, லேசாக அமுக்கி விடவும்.

கடலைமாவுக் கலவையுடன் வெங்காயக் கலவை, நறுக்கி வைத்துள்ள இறால் இவற்றைக் கலந்துக் கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் ஊற்றி, காய்ந் ததும் இறால் கலவையிலிருந்து சிறிதளவு எடுத்து, எண்ணெய்யில் பகோடாக்களா கப் பிசறி விட்டுப் பொரித்து எடுத்துக் எடுங் கள்.

சுவையான இறால் பகோடா தயார்.

# அம்மா

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூத்தவன் கட்டில் விளிம்பில் அமர்ந்து அம்மாவின் தலையை உயர்த்தித் தண்ணீரைப் பருக்குகின்றான். மடக் மடக் என்று குடித்துவிட்டு அம்மா படுத்துக்கொண்டார்கள்!

குனிந்து படுக்க வைக்கும்போது அவனிடம் மெதுவாக அவ னுக்கு மட்டும் கேட்குமாப்போல் கூறினார்கள் : "என்னயச் சுருக்கா செத்துப்போகச் சொல்றீங்களா?….. பாலூத்தக் காத் திருக்கிங்களா?….. கேட்டுதே ஒரு குரல்…."

கண்களை மூடிக்கொண்டார்கள்.

இமைக் கோடுகளில் ஈரம் கசிகிறது… அம்மா பேசினார்களா… அல்லது அவன் மனம் பேசியதா? அவனுக்கு புரியவில்லை.

தம்பியும் மனைவியும் அவனை சோகமாக பார்த்தார்கள்.

இந்த முறையும் ஏமாற்றம் தான்.

"….. நெறய…. செலவாகுமே பயணத்துக்கு?"

"பறவாயில்லை வேற என்னதான் செய்யலாம்…. " என்றபடி கிளம்பினார்கள்…

கைக்கும் வாய்க்குமான வாழ்க்கை வாழும் நடுத்தர குடும்பம் அவனுடையது. கொழும்பில் இவன் போன்றோரின் வாழ்வே வித்தியாசமானது… ஆபூர்வங்கள் நிறைந்தது.

திடீரென்று குஷி வந்து விட்டால் இருநூறு ரூபாய்க்கு ஐஸ்கிரிம் வாங்கித் தின்பார்கள். நூறு ரூபாய்க்குக் குடைவாங்க சங்கடப் பட்டுக்கொண்டு கழுத்தில் டையுடன் மழைக்கு கையை தலையில் வைத்துக் கொண்டு றோட்டில் ஓடுவார்கள்.. அந்த வர்க்கத்தின் அச்சொட்டான பிரதிநிதிதான் இவனும்… இல்லாவிட்டால் அம் பது ரூபாயில் பஸ்ஸில் செல்வதை விடுத்து ஐநூறு ரூபாய் செலவு செய்து காரில் போவானா? ஆண்டுக்கு இரண்டு தடவை என்றால் பரவாயில்லை..

இந்த பத்து பதினைந்து நாட்களுக்குள் இரண்டு தடவை என் றால்….

"அடுத்து எப்பங்க?…. என்னா செய்யப்போறீங்க?…" என்றாள் மனைவி

கேள்வியின் ரகசியம் அவனுக்கும் புரிகிறது… ஏற்கனவே இருந்த நகைகளை பேங்கில் வைத்தாகி விட்டது… அடுத்த முறைக்கு என்ன செய்வது…?

அம்மாதானே என்ன செய்திருக்கோம் அவுங்களுக்கு..? இதை யாவது செய்வோம்… சிலவுவையாக நினைத்துக் கொள்ளா மல்….. அம்மா அவனை கடன்காரனாக்கிவிட்டு போகமாட்டார் கள்.. அம்மாவுக்குத் தெரியும்! தன்னைத்தானே சமாதானமும் செய்து கொள்கிறான். அடுத்த நாள் ஆபீசில் சீ.சீ.யிடம் ஒரு கடன் விண்ணப்பம் எழுதிக் கொடுத்தான். நிலைமையை விளக்கி…

லஞ்ச் டைமில் சீஃப் கிளாக் அவனைக் கூப்பிட்டு அவன் கொடுத்த கடிதத்தை திருப்பிக் கொடுத்தார்…

அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது.. வட்டிக்குத்தான் வாங்க வேண்டுமோ…? "ஐயாயிரம் வாங்கினாலும் மாசத்துக்கு எழு நூற்றைம்பது வட்டி கேட்பானே சில்வா…. வட்டியைத்தான் கட்டலாம், முதல் அப்படியே இருக்குமே "என்று குழம்பிப் போனான் அவன்.

"இது தேவையில்லை" என்ற சீ.சி…. தொடர்ந்தார். "டெத் ஃபண்ட் ஸ்கீம்" பற்றி உங்களுக்குத் தெரியாதா.. இந்த ஸ்கீம் அறிமுக மாகி ஆறேழு மாதங்கள் தான் ஆகின்றன. நிரந்தர ஊழியர்க ளுக்கு இந்த ஃபண்ட் கிடைக்கும். அதுவும் ஒரே நாளில் கிடைக் கும்…. ஆனால் இறந்தவர் ஊழியரின் அம்மாவாக அல்லது அப்பாவாக இருக்க வேண்டும்…" டெத் சர்ட்டிபிகேட் தர வேண் டும்.. உங்கள் சம்பளம் என்ன இப்போது…?

"ஈ.பி.எஃப் கழிக்காம பதினாறு சார்"

"மூன்றுமாத சம்பளம் கிடைக்கும் யூவில் கெட்டீ"

"தாங்க் யூ சார்" என்று எழுந்தான் அவன்.

அம்மா ஏமாற்றமாட்டாள்!…..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org